அறைவு 04 இயம் 13 Oct 24 - 30, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

"நேர்மையாய் வாழ
வேண்டுமாயின் வதைபடுதலும்,
மரியாதையை இழப்பதும்
எந்நேரமும் போராடுதலும்,
இடறி விழுவதும்,
முட்டி மோதுவதும்
அவமானப்படுதலும்
எந்நேரமும் இழப்புக்கு
உள்ளாவதும்
தவிர்க்க முடியாதவை....
மீண்டும் எழுந்து போராடு"

லியோ டால்ஸ்டாய்




சர்வ கட்சி மாநாட்டிற்கு கூட்டமைப்புக்கும், ஈபிடிபிக்கும் அழைப்பு

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைக்கப்படவில்லை??!!!

சர்வ கட்சி மாநாட்டின் போது அரசுடன் இணைந்து இயங்கும் தமிழத் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக சர்வ கட்சிகளினதும் கருத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கான கூட்டம் சனாதிபதியால் கடந்த 22ம் திகதி நடாத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் இலங்கை அரசின் பங்காளிக் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி), அரசுடன் ஒத்து இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் எவையும் அழைக்கப்படவில்லை.

சர்வகட்சிக் கூட்டத்திற்கு பெரும்பாலான சிங்களக் கட்சிகள் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் - தக்கது. இச் சிங்களக் கட்சிகளுள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகாத கட்சிகளும் அழைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கான உச்சபச்ச தீர்வாகத் தனித் தேசத்தைக் கேட்டு நிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏன் இக் கூட்டத்திற்கு அழைக்கப்-படவில்லை என்ற....

17


சர்வகட்சி மாநாட்டின் போது எதிர்க்கட்சித் தலைவருடன் சனாதிபதி

மூதூரில் 17 அக்சன் பெய்ம்

## தொண்டர் படுகொலைக்குப் புலிகளே பொறுப்பு...?

17



## கிழக்கில் உணவுப் பரிசோதனைக் கூடம்

உணவு மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூடத்தைக் கிழக்கில் உருவாக்குவது தொடர்பான முதற்கட்டக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

பரிசோதனையை துரிதமாக மேற்கொள்வதற்கு வசதியாக கிழக்கு இக் கலந்துரையாடல் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அலுவலகத்தில் கடந்த 19ம் திகதி நடைபெற்றது.

17



கொலைகளுக்காகக் குறி வைக்கப்படும் ரி.எம்.வி.பி

## பிள்ளையானை அடுத்து பிரசாந்தனும் கைது



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியின் பொதுச் செயலாளரான பூ. பிரசாந்தன் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பின் காத்தான்குடிப் பிரதேசத்தில் 2008ம் ஆண்டு நடைபெற்ற இரட்டைப் படுகொலைகள் சம்பந்தமாகவே இவர் 23ம் திகதி அதிகாலை 3.10 மணிக்குக் கைது செய்யப்-பட்டதாகக் காவல்துறை தெரிவித்துள்ளது.

முன்னதாக பிரசாந்தன் விசாரணைக்கென கடந்த வியாழக் கிழமை (22) இரவு காவல்துறை-

17



## கிழக்கு மாகாண சபையின் 47வது அமர்வில்

அரசியல் கைதிகளின் விடுதலை வலியுறுத்தல்

கிழக்கு மாகாண சபையின் 47வது அமர்வுகள் கடந்த 20ம் திகதி நடந்தேறியுள்ளன. இவ்வமர்வில் தனிநபர் முன்மொழிவாக வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியுள்ளது.

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை**

தமிழ் அரசியல் கைதிகளை சனாதிபதி பொது மன்னிப்பில் விதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் சபையில் முனைவைத்தார். விவாதிக்கப்பட்ட பின்னர் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பன்முக நிதி அதிகரிப்பு**

இதுவரைகாலமும் மூன்று மில்லியன் ரூபாய்களைத் தமது வருடாந்தப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியாகப் பெற்று வந்த மாகாண சபை உறுப்பினர்கள் மேலும் ஒரு மில்லயின் ரூபாவை அதிகரித்த பன்முகப் படுத்தப்பட்ட நிதியாகப்

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# ஜெனீவாவை எதிர்கொள்ளத் தயாராகும் அரசு – தவறிய தமிழ்த் தரப்பு

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஜெனீவாவில் வெளியிடப்பட்ட முன்மொழிவை அரசு எதிர்கொள்ளத் தயாராகிவருகின்றது. அதற்கமைய தந்திரோபாய வேலைகளை உள்நாட்டில் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

அமெரிக்கா கொண்டு வந்துள்ள ஜெனீவாத் தீர்மானமானது தமிழர்களுக்கு எதிர்பார்த்த நன்மைகளைத் தரவில்லை என்பது வெளிப்படையே!

சர்வதேசத் தரத்திலான அல்லது சர்வதேசத்தின் முழு வலுவுடன் நடாத்தப்படும் விசாரணையே போர்க்குற்றங்களை முழு அளவில் வெளிக் - கொண்டு வரும் எனத் தமிழர்கள் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். எனினும் 'தமிழர்களால் தேர்வு செய்யப்பட்ட அரசியல் தலைமை அவ்விடயத்தில் விட்டுக்கொடுப்புக்குத் தயாராக இருந்ததால் சர்வதேச விசாரணை என்ற பதத்தில் இருந்து சர்வதேசமும் இணைந்திருக்கக்கூடிய விசாரணை என்னும் பதம் சேர்க்கப்பட்டு அதனை கலப்புப் பொறிமுறை என்னும் இலகு தமிழப் பதம் ஊடாகப் புரியவைக்க முயன்றது சர்வதேசம். அதனைத் தமிழ்த் தலைமைகளும் ஏற்றுக்கொண்டதை அடுத்து அதனையே தீர்மானமாக ஐ.நா கொண்டு-வந்தது.

இதன்படி கலப்புப் பொறிமுறை கட்டாயமாக்கப் - படவில்லை என்பதைத் தமக்குச் சாதகமாக இலங்கை அரசு பொது வெளியில் பயன்படுத்தத் தொடங்கியது அதன் முதலாவது தந்திரோபாய நகர்வாக இருந்தது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளில் நியூயோர்க் நகர பத்திரிகைக்குப் பேட்டியளித்த சனாதிபதி, போர்க்-குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணைப் பொறிமுறையே தம்மால் உருவாக்கப்படும் என அறிவித்து, கலப்புப் பொறிமுறை விசாரணையை ஏற்றுக்கொண்டுள்ளதாக வெளியான செய்திகளை அடுத்து முன்னெடுக்கப்பட்ட சிங்கள பேரினவாத சக்திகளின் நெருப்பெடுப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் செயற்பாட்டைத் தொடங்கினார்.

அடுத்து சனாதிபதி நாட்டிற்குத் திரும்பிய பொழுது அவருக்கான வரவேற்புப் பதாதைகள் மிகத் திட்டமிட்ட வைகயில் அமைக்கப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. தேர்தல் காலத்திலேயே தனக்கு பதாதைகள் அமைக்க வேண்டாம் எனக் கட்டுப்பாடுகளை விதித்த சனாதிபதி ஐ.நாவில் இருந்து திரும்பி வந்தபோது அப்பதாதைகளை எவ்வாறு அனுமதித்தார்?

அந்தப்பதாதைகள் தாங்கி நின்ற சொற்பதங்களின் சாராம்சம் "நாட்டைச் சர்வதேசத்திடம் இருந்து காத்த மாபெரும் சேவையாளன்" என்பதாகவே இருந்தது.

இவற்றின் ஊடாக ஆரம்பத்திலேயே சிங்களப் பேரினவாத வாய்க்குள் விளாமற் தப்பிக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக நியாயத்தன்மை வாய்ந்ததொரு விசாரணை முன்னெடுப்பு நிகழும் எனத் தமிழர்கள் நம்பத்தேவையேயில்லை. ஏனெனில் சனாதிபதியின் கைகளிலும் கறை படிந்துள்ளது என்பது உண்மையே!

ஆக மொத்தம் பேரினவாதத்தின் பெருங்கூச்சலைக் கட்டப்படுத்தி வைத்திருக்கும் முயற்சிகளை முன்னெடுப்பதன் ஊடாக ஒட்டுமொத்த விசாரணையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே அரசு முயற்சிக்கின்றது.

அதன் அடுத்த வடிவமாக வெளியிடப்பட்டதே மக்ஸ்வெல் பரணகம அறிக்கை. இவ்வறிக்கையின் முடிவுகளானவை இரண்டு இனக்குழுமங்களையும் சமப்படுத்தி எக்குழுமத்தையும் ஏமாற்றாமல், ஆனால் அரசு நினைப்பதைச் சரியாகச் செய்து முடிக்கக் கூடியதான வார்த்தைப் பிரயோகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளே இறுதி யுததத்தில் கொல்லப்பட்ட மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்பதைத் தெற்கு மக்களுக்குத் தெரிவிக்கும் பரணகம அறிக்கை போர்க்குற்றம் தொடர்பாக படையினர் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை வடக்கு மக்களுக்காகத் தன்னகப் - படுத்தியிருப்பதே இதனை வெளிப்படுத்தியுள்ளது.

இறுதியாக அரசின் தந்திரோபாய முயற்சியாக அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இக்கட்சிக் கூட்டத்தில் உள்ளக விசாரணைப் பொறிமுறையை வலிவுள்ளதாக மேற்கொள்ள எவ்வகையான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என ஆராயப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இச் சர்வகட்சிக் கூட்டத்தில் உள்ளக விசாரணைப் பொறிமுறையை எதிர்க்கக்கூடிய ஒரே தரப்பாகத் தமிழர் தரப்பே இருந்திருக்கும். எனினும் அக்கூட்டத்தில் உள்ளக விசாரணை என்பதை எதிர்ப்பதற்கான வலுவுள்ள குரல் அங்கு எழந்திருக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. ஏனெனில் ததேகூ தமிழர்களின் தலைமைத்-துவக் கட்சியாகவன்றி ஸ்ரீலங்காவின் எதிர்கட்சியாகவே அங்கு கூடியிருக்கின்றது.

சிங்களப் பேரினவாதத்தின் முன் தமிழ்த் தேசியவாதம் ஜெனீவாவை எதிர்கொள்ளத் தயாராகவில்லை என்பது உண்மை!



முள்ளிப் பொத்தானை

## நா.உ இம்ரான் மஹ்ரூப் பாடசாலைக்குத் திடீர் வருகை

முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரிக்கு திடீர் வருகையொன்றைத் திருகோணாமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் கடந்த வாரம் மேற்கொண்டிருந்தார்.

பாடசாலை அதிபர் ஏ மஃருப் அப் பாடசாலையில் நிலவும் வளப் பற்றாக்குறை சம்மந்தமாக கலந்தாலோசித்ததுடன் அவற்றைக் குறிப்பிட்டுக் கடிதமொன்றையும் கையளித்தார்.

ஹலீம்

நகரம்

## நகரசபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையம்

திருகோணமலை நகரசபையில் வேலைத்தள பகுதியில் வாகனங்களுக்கான எரிபொருள் நிரப்பபு நிலையம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 21.10.2015 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகரசபையின் செயலாளர் ஏ.எல் எம். நபீல் தலைமையில் இந்நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நகரசபையின் கிளைத் தலைவர்கள் , உத்தியோகத்தர்கள் , ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

அச்சுதன்



நகரம்

## குற்றச் சந்தேகத்தில் இருவர் கைது

### இராணுவ அதிகாரிக்கு வலைவீச்சு???

பெருங்குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எனும் சந்தேகத்தில் இருவர் கைதாகியுள்ளனர்.

திருகோணமலைக் காவல் தலைமைக் காரியாலய மற்றும் உப்புவெளி காவல் பிரிவின் பெருங்குற்றத் தடுப்பு பிரிவினரால் 20.10.2015 அன்று இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் கொள்ளையிடுவதற்கு உபயோகித்த மோட்டார் சைக்கிள் உட்பட ரூபா முன்னூறாயிரத்திற்கும் அதிக பெறுமதியான பல பொருட்களும் கால்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் லிங்கநகர் மற்றும் சீனக்குடா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் சந்தேகநபர்கள் அளித்த வாக்குமூலத்தில் மேலும் இன்னும் ஒரு இராணுவ அதிகாரி ஒருவரும் இக்குற்றச் செயல்களில் தொடர்புடையவர் எனவும் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்



ஈச்சிலம்பற்று

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் படப்பிரதி எந்திரம்

ஈச்சிலம்பற்று, வெருகல் முகத்துவாரம் துவாரகா மகா வித்தியாலயத்திற்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் போட்டோ கோப்பி இயந்திரம் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.



தம்பலகாமம்

## குளக்கோட்டனில் 14 மாணவர்கள் சித்தி

தம்பலகமம் கோட்டத்திலுள்ள குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் பதின்நான்கு மாணவர்கள் வெட்டுப்- புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலையின் அதிபர் திரு.ந.இலங்கேஸ்வரன், கற்பித்த ஆசிரியர் திரு. பொ. தமிழ்வேந்தன் உட்பட மாணவர்களை தம்பலகாமக் கல்விச் சமூகம் வாழ்த்தியிருந்தது. அதே வேளை இம் மாணவர்களுள் 182 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 6ஆம் இடத்தினை பி.பேருகன் பெற்றுக்கொண்டதுடன் மாணவி வி.டக்சிகா 179 புள்ளிகளைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.


அச்சுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீட மாணவர்களுக்கு விரிவுரைகள் நிறுத்தம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் கலைப்பீடத்தின் இரண்டு மாணவக் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பைத் தொடர்ந்து, அப்பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக பதில் பதிவாளர் அமரசிங்கம் பகிரதன் தெரிவித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற நிர்வாகக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். ஒன்றுகூடலுக்காக கலைப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களை மூன்றாம் வருட மாணவர்கள் அழைத்தபோது, வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்துள்ளது. இதன்போது, பாதிக்கப்பட்ட 06 மாணவிகள் உடல் உபாதை காரணமாக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் விரிவுரைகள் மறுஅறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மாணவர்கள் விடுதிகளிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமென்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.




# மலைமுரசு MALAIMURASU மட்டக்களப்பு செய்திகள்

## கைது செய்யப்பட்ட பெண்கள் விடுவிப்பு

### தலா இரண்டு இலட்சங்கள் அபராதம்

நீதி மன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட சகோதரர்கள் இருவரையும் கைது செய்யச் சென்ற வேளையில் காவல் துறை உத்தியோகத்தரைத் தாக்கி விட்டு பிடிவிறாந்துக் காரர்களில் ஒருவரைத் தப்பியோடச் செய்தார்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட மூன்று பெண்களையும் தலா இரண்டு இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் செல்ல பொத்துவில் நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சகோதரர்களான இருவரையும் தேடிச் சென்று கைது செய்வதற்கு முயற்சித்த வேளையில் அவர்களது உறவினர்களான பெண்கள் மூவர் சேர்ந்து காவல் துறை உத்தியோகத்தரைத் தாக்கி விட்டு பிடிவிறாந்துக் காரர்களில் ஒருவரைத் தப்பியோடச் செய்தனர் என்று காவல் துறையினர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த திருக்கோவில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் உதயராஜ் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று செவ்வாய்க்கிழமை வெளியேறினார்.

## டெங்கு அபாயம்

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் மீண்டும் டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அரசாங்க வைத்திய சாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர் யு.எல்.நசிர்தீன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை அவர் விடுத்துள்ள அறிவுறுத்தலில், "காத்தான்குடியில் மீண்டும் டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

## வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் இளைஞர் பலி

காத்தான்குடி பிரிவுக்குட்பட்ட கூட்டுறவு வீதியை சேர்ந்த 19 வயது நிரம்பிய கோ.தனுஸ்ப்பிரியன் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை புதுக்குடியிருப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் வேகமாக சென்று கொண்டிருந்த வேளையில் வேகத்தினை கட்டுப்படுத்த முனைந்தபோது விபத்துக்குள்ளானதாகவும் காத்தான்குடி காவல்துறையினர் தெரிவித்தனர்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தாயை பலிதீர்த்த மூவர்

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரிவிலுள்ள கணபதி நகர் ரமேஷ்புரத்தில் தாயின் மீது மகனும் மேலும் மூவரும் சேர்ந்து தாக்கியதில், படுகாயமடைந்த தாய் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

58 வயதான லலிதா அருமைத்துரை என்ற தாயே தாக்குதலுக்குள்ளானார். உடனடியாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், பின்னர் மட்டடக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## 122 பாடசாலைகளுக்கு சுகாதார உதவிகள்

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 122 பாடசாலைகளில் 102 தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கு உயர்தரத்திலான மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதற்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.நிஸாம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு முதற்கட்டமாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி வைத்தார். சுகாதாரம் முன்னோக்கிய பாடசாலை சமுதாயத்தை உருவாக்குவதற்காக சுகாதார வசதிகள் வழங்குகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டம் - 2015ன் கீழ் பாடசாலைகளில் சுத்திகரிப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதோடு, சகல பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் தலா இரண்டு பாடசாலைகள் வீதம் தெரிவுசெய்து உயர்தரத்திலான மலசலகூட வசதிகளை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்கால நடவடிக்கை குறித்த கூட்டம்

காத்தான்குடியின் எதிர்கால ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் முன்னெடுப்புக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொழில் வேலை வாய்ப்பு மற்றும் எதிர் வரும் நகர சபைத் தேர்தல் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று ஐ.தே.கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அமைச்சர் சுவாமிநாதனின் இணைப்பாளர் சசிதரனின் உத்தியோக பூர்வ இல்லத்தில் சமீபத்தில் இடம் பெற்றது.



## சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிக்கும் நிகழ்வு

இம்முறை நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி பதக்கம் அணிவித்து கௌரவிக்க கல்வி அபிவிருத்தி அமைப்பு நிறுவனமும் வாமி நிறுவனமும் இணைந்து ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான நடவடிக்கை கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அபிவிருத்தி அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஏ.எல்.மீராசாகிப் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளுக்கு இதற்கான விண்ணப்பப்படிவங்கள் கல்வி அபிவிருத்தி அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஏ.எல்.மீராசாகிப்பினால் பாடசாலை அதிபர்களிடம் நேற்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன.



## கொலைக்குற்றத்திற்கான சந்தேக நபர்கள் இருவர் கைது

கொலைச் சந்தேகத்துடன் தொடர்புடைய இரு குற்றவாளிகளுக்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது, கடந்த 25.04.2010 அன்று பொலிகண்டி பிரதேசத்தில் வசிக்கும் சிவலிங்கம் சியாமளா என்பவரை கொலை செய்யும் நோக்குடன் வரணி பிரதேசத்திற்கு கடத்தி சென்று, இராஜாகிராமம் பகுதியில் அடைத்து வைத்திருந்து நைலோன் கயிற்றினால் கழுத்தை நெரித்து கல்லால் அடித்து காயமேற்படுத்தியதுடன்,

130,000 ரூபா பெறுமதியான காப்பு, மோதிரம், தோடு சங்கிலி, கையடக்க தொலைபேசி துவிச்சக்கரவண்டி ஆகியவற்றினை கொள்ளையடித்ததாக குற்றச்சாட்டப்பட்ட யோகராசா, ரவீந்திரன், தம்பிராசா சீமா.கெரோமியஸ் ரகுபரன் ஆகியோருக்கு 2 வருட இவருக்கும் 160,000 ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு நீதிபதி கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, 16.10.2015 அன்று கைது செய்யப்பட்ட கடத்தல் வழக்கு சந்தேக நபர்களுடன் 11வது சந்தேக நபரும் இன்று சட்டத்தரணி சிவகுருநாதன் மூலம் சரணடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டினுள் நுழைந்த வாகனம்

வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி தெருவோரத்திலிருந்த வீட்டுக்குள் புகுந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை கொம்மாதுறையில் இடம்பெற்றதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் வீட்டுக்கும் வாகனத்திற்கும் சிறிது சேதமேற்பட்டுள்ளது. கொம்மாதுறை உமா மில் வீதியிலிருந்து சென்ற வாகனம் கொழும்பு மட்டக்களப்பு நெடுஞ்சாலையை ஊடறுத்து நேராக வீட்டுக்குள் சென்று மோதி நின்றுள்ளது. யாருக்கும் காயங்களோ உயிரிழப்புக்களோ ஏற்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# நாடாளுமன்றில் நேற்று

எட்டாவது நாடாளுமன்றத்திற்கு தெரிவான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நேற்று முதல் முறையாக நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு காலம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை, உதலகம மற்றும் பரணகம ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் சம்பந்தமான இரண்டாம் நாள் விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய —

அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல, 1948ம் ஆண்டில் இருந்து தேசிய பிரச்சினை உருவாகிய காலத்தில் இருந்தே, எந்த அரசாங்கமும், மிதவாத தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கவில்லை என்று தெரிவித்தார்.

ஆரம்பத்தில் தமிழ் தலைவர்கள் தனி நாடு கோரவில்லை. 50 ஆண்டு காலப்பகுதயில் அவர்கள் மொழியுரிமையே கேட்டனர்.

எனினும் அதனைக் கூட எந்த அரசாங்கமும் வழங்கவில்லை. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 30 வருடங்களில் பெரிதானது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர், தற்போதும் அதே நிலைமை உருவாகி இருக்கிறது. மிதவாத தமிழ் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து ஒற்றுமையுடன் செயற்படுகின்றனர்.

அவர்களுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த பிரச்சினை தீர்க்கப்பட வெண்டும் என்றே நினைக்கின்றனர் என்று அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் இலங்கையின் நீதித்துறை பொறிமுறை என்றே குறிப்பிடப்- பட்டுள்ளது. எந்த இடத்திலும் சர்வதேசம் என்ற சொல் பாவிக்கப்படவில்லை. இதில் கலப்பு நீதிமன்றம் பற்றி கூறப்படவில்லை.

இந்த நிலையில் இலங்கையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி, புதிய நாடொன்றை உருவாக்குவதற்கு ஒன்றுபட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை எந்த இனத்துக்கும் சொந்தமான நாடு இல்லை என்றும், இது பல்லின நாடு என்றும் ஜே வி பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தமது உரையில் தெரிவித்தார்.

இஸ்லாமிய சிறுமிகளின் பர்தா, சிங்கள சிறுமிகளின் லமாசாரி, தமிழ் சிறுமிகளின் பொட்டு இவை யாவும் இலங்கையின் இனங்கள் மத்தியில் அடையாளப்படுத்தக்கூடிய சின்னங்கள்.

அத்துடன் ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு மதத்துக்கும் தனித்தனியே அடையாளங்கள் இருக்கின்றன.

இதனை உணராது தமது மதமே நல்ல மதம் என்றும், தமது இனமே முதன்மை இனம் என்றும் கூறுவது அறியாதவர்களின் செயலாகவே இருக்கும்.

இந்த நிலையில், இலங்கையின் பல்லின, பல்சமய, பல்கலாசார விழுமியங்களை உணராத வரையில், இலங்கையால் ஒரு அங்குலம் கூட முன்னேற்றம் காணமுடியாது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தற்போதுள்ள பிரச்சினை தீர்க்கப்படாதவிடத்து, மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் உருவாக்கப்படுவதை தவிர்க்க முடியாது என்றும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

விவாதத்தில் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இலங்கையின் அரசாங்கங்கள் செவிசாய்க்கத் தவறியதன் காரணமாகவே தமிழீழ கோரிக்கை உருவானதாக தெரிவித்தார்.

ஜே வி பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தமது உரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்நாட்டு பிரச்சினைகளை இந்தியாவுக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று கூறியதை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று சம்பந்தன் இதன் போது தெரிவித்தார்.

1961ம் ஆண்டு தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்ட போது தாமும் தமது தலைவர்களும் கைது செய்யப்பட்டதாக சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

எனினும், உள்நாட்டிலே பிரச்சினைகள் தீர்க்கப்படாத காரணத்தினாலேயே வெளிநாடுகளை நாடவேண்டி ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதன்போது பண்டா - செல்வா ஒப்பந்தம் இந்தியாவிலும், டட்லி சேனாநாயக்க – செல்வா ஒப்பந்தம் என்ன வொசிங்டனிலுமா கைச்சாத்திடப்பட்டது என அவர் கேள்வியெழுப்பினார்.

இதனை அடுத்து உரையாற்றிய அமைச்சர் சஜித் பிரேமதாஸ, யுத்தம் வெல்லப்பட்ட போதும், சமாதானம் வெல்லப்படவில்லை என்று கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவாநந்தா தமது உரையில், போர்க்குற்றத்தை உருவாக்கியவர்கள் , தமிழ் தேசிய கூட்டமைப்பினரே என்று குற்றம் சுமத்தினார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்தன கருத்துக்களை வெளியிட்ட போது, ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கும் அவருக்கும் இடையில் வாதவிதாமும் இடம்பெற்றிருந்தது.

இதேவேளை, சிறிமா சா'த்திரி ஒப்பந்தம் மூலம் மலையக தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதன் ஊடாக உள்நாட்டு பிரச்சினையில் வெளிநாட்டு தலையீடு கொண்டுவரப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சுட்டிக்காட்டினார்.

மலைமுரசு
MALAIMURASU

## இலங்கைச் செய்திகள்


## இந்திய - இலங்கை மீனவர் பிரச்சனை தொடர்பாகப் பேச்சு

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகளைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையொன்று நேற்று (23) நடைபெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட குழுவினர் இந்த பேச்சுவார்த்தையில் பங்குபற்றியதாக தகவற் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வொன்றை எட்டுவதற்காக பல்வேறு தரப்புகளிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நிகழ்ந்துள்ளன.

மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து கடற்படை, கரையோரப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் வடபகுதி மீனவர் தரப்புகளுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

## தமிழரின் பிரதிநிதி நாமே!




ஜெனீவா பிரேரணை தொடர்பில் சனாதிபதி ஏற்பாடு செய்த அனைத்து கட்சி மாநாட்டில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இல்லையென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். தமிழரை பிரதிநிதித்துவப் படுத்தும் உரிமை தமக்கே உள்ளதாகவும் , தமிழ் தேசியக் கூட்டமைப்பு எல்.டீ.டீ.ஈ இயக்கத்தையே பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து கட்சி மாநாட்டுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அழைக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## முத்தமிழ்ச் சங்கத்தின் இளம் எழுத்தாளர் அணி பேராசிரியர் ஆனந்தகுமாரைச் சந்தித்தனர்





திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிவரும் முத்தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இளம் எழுத்தாளர் அணியொன்று பேராசிரியர் பா. ஆனந்தக்குமார் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி- யுள்ளது.

கடந்த வியாழக்கிழமை (22) மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் மாலை 4 மணிக்கு நிறைவுற்றது.

“சர்வதேசத் தரம் நோக்கிய தமிழ் எழுத்து” என்ற தலைப்பில் பேராசிரியர் பா. ஆனந்தக்குமார் அவர்கள் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமான கருத்துக்களை வெளிப்படுத்- தினார்.

சர்வதேசத்தரம் நோக்கிய எழுத்துக்கள் சுயத்தைப் பிரதி பலிக்கும் வகையில் எழுதப்பட வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு தமிழர்களும் தமிழர்களாக எழுத முயற்சிக்க வேண்டும் என்றார்.

இச்சந்திப்பில் சங்கத்தின் செயற்பாட்டாளர் மாயன், 'கிழக்கு பல்கலை-திருமலை வளாக கலாநிதி ரகுராம், ஊடக சங்கத் தலைவர் யாசிம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## மனித உரிமையை மீறுகிறது செக் குடியரசு

### ஐ.நா. மனித உரிமை குற்றச்சாட்டு

திட்டமிட்ட வகையில், செக் குடியரசு அரசாங்கம் மனித உரிமை மீறல்களை அகதிகளுக்கு எதிராக பிரயோகிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அடிப்படை வசதியற்ற நிலையில், குடியேறிகளை 90 நாட்கள் வரையில் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் செயிட் ராட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார். செக் குடியரசுக்குள் நுழையும் குடியேறிகளை மனிதாபிமான மற்ற முறையில் ஆடைகளை களைந்து, தடுத்து வைப்பதற்காவும், இது தொடர்பில் ஆராய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## துனிசியாவிற்கு நோபல்

துனிசியாவின் தேசிய பேச்சுவார்த்தை குழுவிற்கு 2015ம் ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.



துனிசியாவின் பன்முக ஜனநாயகக் கட்டமைப்பிற்கு பாரிய பங்களிப்பினைச் செய்தமைக்காக இந்த நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு அமைப்புகளை உள்ளடக்கிய இந்த பேச்சுவார்த்தைக் குழு துனிசியாவில் அரபு எழுச்சி தொடங்கிய நிலையில் அங்கு ஜனநாயக முறையில் ஆட்சி மாற்றம் ஏற்படப் பாடுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐந்தாவது அணுவாயுத நாடாக பாக்கிஸ்தான்

கடந்த 2011ஆம் ஆண்டு 90 தொடக்கம் 110 வரையான அணுவாயுதங்களை வைத்திருக்கும் என நம்பப்பட்ட பாகிஸ்தான் தற்போது 110 தொடக்கம் 130 வரையான அணுவாயுதங்களை வைத்திருக்கலாம் என கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்ட அமெரிக்க அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷரீ:ப் தற்போது அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்தியாவின் அணுவாயுதப் பலம் எந்தளவுக்கு வளர்ச்சியடைகிறது, அணுவாயுதங்களை ஏவும் எத்தனை கருவிகளுக்கு பாகிஸ்தான் திட்டமிடுகிறது என்பதைப் பொறுத்தே பாகிஸ்தானின் அணுவாயுத வளர்ச்சி இருக்குமென்று மேற்படி அறிக்கை கூறுகிறது. கடந்த 20 வருடகால பாகிஸ்தானின் பெறுபேறுகளின் அடிப்படையிலும், தற்போது தயாரிக்க திட்டமிடப்பட்ட ஆயுதங்களின் அடிப்படையிலும் 2025 ஆம் ஆண்டில் பாகிஸ்தானது 220 தொடக்கம் 250 அணுவாயுதங்களைக் கொண்டு உலகின் ஐந்தாவது பெரிய அணுவாயுத இருப்பாளராக மாறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## சவுதி இளவரசர் கைது



திகதி அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஓய்வெடுப்பதற்காக தன்னுடைய ஆடம்பர பட்டாளங்களுடன் பயணமாகியுள்ளார்.

37 மில்லியன் டொலர் மதிப்புள்ள அந்த மாளிகையில் பணியாற்றிய 3 பெண்களை இயற்கைக்கு எதிராக கற்பழிக்க முயன்றதாக கைது செய்யப்பட்ட இளவரசர் அவருக்கு கீழ் பணியாற்றிய ஒரு ஆணை கட்டாயப்படுத்தி ஓரினச்சேர்க்கைக்கும் துன்புறுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. லாஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறையினரின் விசாரணைக்கு பிறகு, சுமார் 3 லட்சம் டொலர் பிணையதொகை செலுத்தி தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், இளவரசருக்கு ஒரு வருட சிறை தண்டனையும் 3,000 டொலர் அபராதமும் விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

பணிவிடை செய்யவந்த 3 பெண்களை கற்பழிக்க முயன்றதாக சவுதி இளவரசர் கைதாகி உள்ள நிலையில், அவரது அறையில் நிகழ்ந்த அதிர்ச்சி சம்பவங்கள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சவுதி அரேபிய முன்னாள் மன்னரான அப்துல்லாவின் மூத்த மகன் இளவரசர் மஜட் பின் அப்துல்லாகடந்த செப்டம்பர் 21ம்

## 400 ஆண்டுகளின் பின் தெரியும் தேவாலயம்

மெக்சிக்கோ நாட்டில் 400 ஆண்டுகளுக்கு முந்தைய தேவாலயம் ஒன்று ஆற்றுக்குள் இருந்து மீண்டும் வெளியே தெரிவதால் மெக்சிகோ மக்கள் பரவசத்தில் திளைத்துள்ளனர். நெசுஹவால்கோயோட்ல் நீர்த்-தேக்கத்தில், வறட்சியால் 82 அடிக்கு நீர் குறைந்து போனது. அதனால் 16ம் நூற்றாண்டின் மத்தியில், ப்ரெயர் பார்ட்டோலோம் டி லா கஸாஸ் என்கிற பாதிரியாரின் தலைமையில், இப்பகுதியைச் சேர்ந்த மக்களால் நிறுவப்பட்ட 183 அடி உயரமுள்ள இந்த தேவாலயம் தற்போது வெளியில் தெரிகிறது. கடந்த 1773 மற்றும் 1776ம் ஆண்டுகளில் இப்பகுதியில் ஏற்பட்ட பிளேக் நோயால் இந்த தேவாலயம் கைவிடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.



## உலகின் முதலாவது பணமில்லா பெரிய நாடு

உலகின் **முதல் பணமில்லாத நாடு** என்ற பெருமையைப் பெறுகிறது ஐரோப்பாவின் முக்கிய நாடான ஸ்வீடன். உலகின் அனைத்து நாடுகளிலும் ரொக்கப் பணம்தான் முக்கிய மாற்றுக் கருவியாக செயல்படுகிறது. பெருமளவு மொபைல் வழி பணம் செலுத்தும் முறை இந்த நாட்டில் வழக்கத்துக்கு வந்துவிட்டதால், இனி பணத்துக்கு வேலை இல்லை எனும் நிலை ஸ்வீடனில் வந்துவிட்டது.

ஸ்வீடன் நாட்டின் பணமான ஸ்வீடிஷ் கரோனாவை இப்போது அந்த நாட்டு மக்கள் பெருமளவில் பயன்படுத்துவதில்லை. பெரும்பாலான செலுத்துகையை அவர்கள் தங்கள் கடன் அல்லது வங்கி அட்டை, மொபைல் மூலமே செலுத்துகிறார்களாம்.

## கைதி தப்பி ஓட்டம் -34 பேர் வரை கைது



மெக்ஸிக்கோவின் **போதைப்பொருள் கடத்தல் மன்னனான எல் சபோ குஸ்மானின்** தப்பிப்புத் தொடர்பாக, அவனது மைத்துனன் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்-படுகின்றது.

மெக்ஸிக்கோவின் உயர் பாதுகாப்புச் சிறைச்-சாலையில் அடைக்கப்பட்டிருந்த எல் சபோ, கடந்த ஜுலையில் தப்பித்திருந்தார். சுரங்கமொன்றை அமைத்தே அவர் தப்பித்திருந்தார். இந்நிலையில், அவரது விடுதலைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே, அந்த அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சுரங்கப் பாதையை அமைப்பதற்கு இவர்கள் உதவினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதன்படி, இந்தத் தப்பிப்புத் தொடர்பாக இதுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை, 34ஆக மாறியுள்ளது.

இவ்வளவு கைதுகள் இடம்பெற்ற போதிலும், தங்களது முதலாவது இலக்கான எல் சபோவைக் கைது செய்வதிலிருந்து தங்களது கவனம் மாறியிருக்கவில்லை என, மெக்ஸிக்கோ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சிரியா - ரஷ்யா சந்திப்பு



சிரிய ஜனாதிபதி பஸார் அல் - அசாட் மொஸ்கோவிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது சிரிய ஜனாதிபதி பஸார் அல் - அசாட்டிற்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடமீர் புட்டினுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

*2011ஆம் ஆண்டு உள்நாட்டு மோதல்கள் ஆரம்பமான நிலையில், சிரிய ஜனாதிபதி தமது முதல் வெளிநாட்டு விஜயமாக மொஸ்கோ சென்றுள்ளார்.*

ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா, கடந்த மாதம் சிரியாவில் வான்தாக்குதல்களை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆணுறைகளில் வெடிகுண்டு தாக்குதல்

### ஐ.எஸ்.ஐ இன் புதிய யுக்தி



ரஷ்ய விமானங்களை அழிக்க ஆணுறைகளில் வெடிகுண்டுகளை வைத்து ஐஎஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது தெரியவந்துள்ளது. சிரியாவில்

அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிராக நீண்ட காலமாகவே உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

ஐஎஸ்-க்கு எதிராக அமெரிக்கா கூட்டுப் படைகள் வான்வழி தாக்குதலை நடத்திவரும் நிலையில், ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யாவும் வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது. ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்க ஐஎஸ் தீவிரவாதிகள் வித்தியாசமான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

விமானங்களை அழிக்க ஆணுறைகளில் வெடிகுண்டுகளை வைத்து தாக்குதல் நடத்துவது தற்போது தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தாயகச் செய்திகள்

## மாணவிக்கு பாலுறுப்பைக் காட்டிய கடற்படை வீரர் கைது

பாடசாலை மாணவியொருக்கு பாலுறுப்பை காட்டிய கடற்படை வீரரொருவரை கைதுசெய்துள்ளதாக ஆணமடுவ காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

ஆணமடுவ- கம்உதாவ சந்தியிலேயே குறித்த சந்தேகநபர் அநாகரிகமாக நடந்துகொண்டுள்ளார். 13 வயதான மாணவி பாடசாலை முடிந்து வீட்டுக்கு செல்லும் வேளையிலேயே இச்சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

சந்தேகநபர் ஆணமடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் 33 வயதானவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் காங்கேசன்துறை கடற்படை முகாமில் சேவையாற்றுபவர் எனவும் விடுமுறைக்காக ஊருக்கு வந்தவரெனவும் மேலும் தெரிய வருகின்றது.



## திருடப் பயன்படுத்திய இராணுவ வாகனத்திற்கு பிணைமுறி

கைதடி பரவை கடல் பகுதிகளில் விளம்பர பதாகைகளுக்கு வைக்கப்பட்டிருந்த இரும்புக்களைத் திருடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இராணுவத்தின் சிறிய ரக லொறியை, 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பிணை முறியில் எடுத்து செல்ல, சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், நேற்று செவ்வாய்க்கிழமை (20) அனுமதியளித்தார். கைதடி பரவை பகுதிகளில் வீதியை ஒட்டியதாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விளம்பர பாதகைகள் அண்மைக்காலமாக திருடப்பட்டு வந்தன. கடந்த 16ஆம் திகதி அதிகாலை ரோந்தில் ஈடுபட்ட சாவகச்சேரி காவல்துறையினர், விளம்பர பதாகைகளின் இரும்புக் கம்பிகளை வெட்டிக்கொண்டிருந்த 8 இராணுவத்தினரைக் கைது செய்தனர். அதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட இராணுவ வீரர்கள், பதில் நீதவான் முன்னிலையில் 17ஆம் திகதி ஆஜர்ப்படுத்தப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

## கண்ணிவெடிகள் கண்டுபிடிப்பு

யாழ்.குப்பிளான் தெற்கு கிராமத்தில் தோட்டக்காணி ஒன்றிலிருந்து இரு வாகன எதிர்ப்பு கண்ணிவெடிகள் மற்றும் சில சாதாரண கண்ணிவெடிகளுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இப் பகுதியில் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் குறித்த கண்ணிவெடிகளை நேற்றய தினம் கண்டுபிடித்துள்ளதாகவும்,

இதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கும் ஊர் மக்கள் குறித்த கண்ணிவெடிகள் போர்காலத்தவை எனவும் எதிரியை இலக்கு வைத்து புதைக்கப்பட்டிருந்ததாகவும் மேற்படி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிராமமக்களின் கைகளிலேயே முடிவு

ஆனைவிழுந்தான் குளம் மக்கள், வயல் காணி பிரச்சினைக்கு தமது கிராமத்துக்குள் தீர்மானமொன்றை எடுப்பதனூடாக உடனடியாக வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுமென மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், நேற்று செவ்வாய்க்கிழமை (20) தெரிவித்தார். ஆனைவிழுந்தான் கிராமத்துக்கு மாவட்டச் செயலாளர் சென்று இக்கிராம மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். "தாங்கள் 1983ஆம் ஆண்டு இக்கிராமத்தில் குடியேற்றம் செய்யப்பட்டதாகவும் தங்களுக்கு இதுவரை வயல் காணி வழங்கப்படவில்லை" என கிராம மக்கள் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள்குடியேற்ற கோரிக்கை

வட மாகாணத்திலிருந்து 1990ஆம் ஆண்டு இரண்டு மணித்தியாலங்கள் அவகாசத்தில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினையை ஆராய்ந்து, அவர்களுக்கான மீள்குடியேற்றம், நஷ்டஈடு மற்றும் தேவைகளை ஆய்வு செய்வதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டுமென சமூக ஆர்வலர் எம்.நைஸர் நிஸாம் கோரிக்கை விடுத்தார். யாழ்.மன்ப உல்உலூம் மதுரஸா மண்டபத்தில் 19ஆம் திகதி நடைபெற்ற தமிழ் - முஸ்லிம் உறவுக்கான அமைப்பின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். "எதிர்வரும் 31ஆம் திகதியுடன் வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் முடிவடை-கின்றன. கடந்த 24 வருடங்களாக அத்தினத்தை கறுப்பு தினமாக நினைவு கூறி வந்தனர். அரசாங்கமும் அமைச்சர்களும் இந்த மக்களுக்கு நஷ்டஈடு வழங்கவில்லையென்பதுடன், மீள்குடியேறிய மக்களுக்கு உதவிகளும் செய்யவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தமிழ் மக்கள்



வவுனியா, ஓமந்தை,நெல்வேலிக்குளம் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்வதற்காக போராடுகின்றனர். 1997 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் இவர்களது வீடுகள், கட்டடங்கள் என்பன முற்றாக அழிக்கப்பட்டு ஓமந்தை இராணுவ முன்னரங்க காவல்நிலையாக இப்பகுதி மாற்றப்பட்டது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 ஆண்டு இப்பகுதி மக்கள் மீள்குடியேற்றப்பட்ட போதும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இன்றுவரை செய்து கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அனுபவ பகிர்வு செயலமர்வு

மத்திய மாகாண- வடமாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் தங்கள் அனுபவ பகிர்வுகளை பேசிக் கொள்வதற்கான 3 நாள் செயலமர்வு இன்றைய தினம் தொடக்கம் யாழ்.நகரில் உள்ள விடுதி ஒன்றில் நடைபெறுகின்றது.

இதில் இரு மாகாணங்களையும் சேர்ந்த அமைச்சர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது இரு மாகாணங்களும் தங்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள், அதில் எதிர்கொண்ட சவால்கள் தொடர்பான அனுபவ பகிர்வினை செய்யவுள்ளதுடன் இரு மாகாணங்களுக்குமிடையிலான உறவை வலுப்படுத்தும் நோக்குடன் இந்த செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

## தொலைக்காட்சி நிறுவனமொன்றிற்கு சீல் வைப்பு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் இயங்கும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிறுவனமொன்றுக்கு நீதிமன்ற அனுமதியுடன் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சீல் வைத்தனர். குறித்த நிறுவனம், சட்டவிரோதமான முறையில் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையம் என்பவற்றை இயக்கியதைக் கண்டறிந்த ஆணைக்குழு, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கமைய சீல் வைத்துள்ளது. நிறுவனத்திலிருந்த ஒளி மற்றும் ஒலிபரப்புக்கு பயன்படுத்தப்படும் சாதனங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டதுடன், அந்நிறுவனத்துக்குப் பொறுப்பாக இருந்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இலஞ்சம் கொடுக்க முயற்சித்தவர் கைது

அச்சுவேலி காவற்துறை நிலைய பொறுப்பதிகாரி சமன் திலந்த குமாரவுக்கு 6 ஆயிரம் ரூபா இலஞ்சம் கொடுக்க முயற்சித்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். அனுமதிப்பத்திரம் இன்றி 6 மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்ற மூன்று பேர் கடந்த மாதம் 29 ஆம் திகதி அச்சுவேலி காவற்துறையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய லொறியை லொறி உரிமையாளர் பெற மனுவொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டாம் எனக் கோரி அச்சுவேலி காவற்துறை நிலைய பொறுப்பதிகாரிக்கு 6 ஆயிரம் ரூபா இலஞ்சம் கொடுக்க முயற்சித்த போது அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

## மர நடுகை மாதம்

வடமாகாண மரநடுகை மாதமான கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடங்கி 30ம் திகதி வரையான காலப்பகுதியில் வடக்கில் ஐந்து இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதம் தொடர்பாக அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம்மவர்களிடம் எனைச் சேர்ப்பதற்காய்
என்னருகே நிற்கின்றது - எருமை
ஆயுதம் தரித்துச் சிறைவாசலின்
கதவருகே..

எனினும்
என்னிருப்பைப் பதிவு
செய்வதற்காய் - எழுதும் நிறைவு மடல்..

துயர் படிந்து வெளிவரும் விழிநீரின்
ஊடே
இதைப்படிக்கும் நண்பனே..

கடைசி மடல் என்று
கனவினிலும்
நினையாதே.

மீள
வித்தாய் விழுதலும்
வீரியமாய் முளைத்தலும்
பூவும் பிஞ்சும் கனியும் தாங்கிப்
போராட வருதலும் எவ்வாறு
கடைசியாகும்?

எப்போதாவது வெண்ணிறப் புறாக்களால்
எங்களின் மேகங்கள்
சூழப்பட்ட பின்பு
கடைசி மடல்கள்
வரையப்படலாம்.. ..

எனினும் இப்போதல்ல .. ..

அப்பாவையும் அம்மாவையும்
கேட்டதாகச் சொல்.. இறந்த பின்னும்
மூன்றாம் நாள்
உயிர்த்தெழுவேண்டி
மன்றாடும்..

எம் மக்களிடம் மட்டும் எவையுமே
சொல்லாதே.. நீ சொல்வதை விட
அவர்கள் நிறையவே தெரிந்து கொண்டார்கள்..

என்றாலும்
எஞ்சிய எவையேனும் என்னுடையவை
எனில்
அவர்களுடையதாக்கி விடு..

துரோகிகளிடம் சொல்.. காந்தியை
நினைக்கும் எவரும் கோட்சேயை
மறந்ததில்லையென்று - அவர்கள்
ஆண்டிகளாயிருந்தாலென்ன
அரசர்களாயிருந்தாலென்ன..

இதோ உடலைச் சம்பல் செய்து
உப்பும் போட்ட பின்பு
உருசித்துப்பார்ப்பதற்காய் - சிலர்
உள்ளே வருகின்றார்கள்.

நிறைவு செய்கின்றேன் நண்பனே..

உயிர் கொடியை
உலுக்கும் ஒலி மிக
அருகே கேட்கிறது

நிறைவு செய்கின்றேன் நான்..

நம்பிக்கையுடன் இரு..
நாளைய செய்தித்தாளின் தலைப்பு
நாமாவோம்..

நம்பிக்கையுடன் இறக்கின்றேன்..

நாளை எங்களைப் புதைத்த
திட்டுக்களின் மீது - செங்கொடி தாங்கிய உங்களின் பாதங்கள்
அணிவகுக்கும் எனும்..

மாயன்

# இவ்வளவே!

இவ்வளவே வாழ்க்கை,
இனிமேல் கிடையாது!
இவ்வளவில் நலம் - தீதில்
எதுகூட - எதுகுறைய?....

என்று நமை நாமே
எடை போட்டுப் பார்த்தோமேல் -
நன்று விளங்கிவிடும்,
நடு நிலைமைத்'துலை' யாலே!

விளங்குவதால் என்ன?
விளங்கா விடில் என்ன?
களங்கம் இருந்தாலும்
கடந்ததுதான் வாராதே?

எனவே முதல் அறிந்து,
இரண்டாவதாய் வாழ்ந்து
கனவை நனவாக்கிக்
கழித்திடுவோம் வாணாளை!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

# வாழ்க நீ நீடூழி

வே. மேனுகா
வரோதயநகர்

என் அன்பு மலைமுரசுக்கு
உன் வாசகி எழுதும் ஓர் மடல்
என் எண்ணத்தில் உதித்ததை
உன் வயிற்றில் வாரம் ஒரு முறை
சுமக்கிறாய் நீ........

என் அன்பு தோழனே
பல பல விடயங்களை
பல்சுவை கலந்து வாரம் ஒருமுறை
என் வீட்டுக் கதவுகளை
தட்டுகிறாய் நீ........

எண்ணுக்கடங்காத செய்திகளை
எண்ணிப் பார்க்காமலே இருபது
பக்கங்களை கொண்டு இனிதாய்
படகு போல் விரைகின்றாய் நீ........

நல்ல நல்ல கருத்துக்களை கொணர்ந்து
நாட்டிற்கும் நம் மக்களுக்கும்
நடப்பவைகள் நல்லவைகளாக
நல்லுரை புகட்ட வேண்டும் நீ.......

உன் வயிற்றில் என் கருவையும்
சுமக்கையில் என் உள்ளமெல்லாம்
பூரிப்படைவதை நீ அறிவாயோ?
என்றும் நீ நீடூழி வாழ்க
என் அன்புத் தோழனே........

# முதல் காதல்

முதல் பார்வையிலேயே,
என் பருவம் பதறியதே,
மாற்றம் ஒன்று நிகழ்ந்தது
பார்க்கப் பார்க்க - பார்வையானாய்
உனை விட்டகற்ற மறுத்தன விழிகள்
பேச்சற்று போனேன்
கிரங்கியது கண்கள்
தலை சுற்றாமல் வீழ்ந்தேன் - நீயோ
எனை தாங்கி நின்றாய்
கன்னி நான் கர்ப்பம் அடைந்தேன்,
[illegible]
என் குழந்தையாய் நீ..

தன்யா

# கவி முரசு

## நீ என் கவி

- மலைநேயன் -

உனக்காக சுமந்த இதய சுகங்கள் - உன்
வரவுக்காக ஏங்குகிறது
வரைகிறேன் வண்ண வடிவமிக்க எழுத்துருவில்
கவி நீ மறைந்திருக்கும் காலமதில் - நான்
உணர்கிறேன் தாமதமாகும் வினாடி ஒவ்வொன்றும்
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை - என்ற
உன் வாக்கு வாழ்வில் வர மறுக்காதே - என்
வான் மதியே பௌர்ணமி இரவில் கூட
துயிலாத என் கண்மணிகள் வரைந்த வரிகள்
நினைவுகளின் வளைவுகளின் - மீது
பாதத்தால் பயணம் செய்யும் போதும் - பனித்
துளியில் நனைகிறது விழியில் வெளிவரும்
துளியில் உடைகள் உடலுடன் இணைகிறது
உனக்காக காத்திருக்கிறேன்
ஏம்மா இப்படி பண்றீங்களேம்மா .....

## பழி ஓயுமா !

அ. கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு



விந்தை விதைத்தார் தந்தையவர் - ஒரு
விந்தை தனையே விளைத்திட்டார்!
தந்தை விருப்புக்கு ஒத்தாசை - தாய்
தன்னைக் கொடுத்தது அவளாசை!

வந்து பிறந்தேன் நானப்பா - துயர்
வாழ்வில் காண்பது ஏனப்பா?
சொந்தம் பந்தம் பலநூறு - இருந்தும்
சோகம் காண்பது பெறுபேறு!

அந்தோ வாழ்வு பரிதாபம் - பிறர்
அல்லும் பகலும் பரிகாசம் !
விந்தை என்பது இது தானா? - நான்
வந்து பிறந்தது அதுவீணா?

போர்வை, மாலை, புகழ், காசு - ஏழைப்
புலவன் எனக்கு இவைதூசு!
பார்வை சமூகப் பண்பாடு - எனைப்
பார்ப்பவர் பலர்க்குள் முரண்பாடு!

கொஞ்சக் காலம் புவி வாழ்க்கை - இதைக்
கொண்டு நடத்திட இந் யாக்கை
பஞ்சம் பட்டனி தீர்ந்திடலாம் - பழி
பகர்பவர் குரல்கள் ஓய்ந்திடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் முட்டையிட்ட ஆமைகள்

பகலவன் –

**"நாங்கள் தான் கிழக்கின் தேசியத்தை முதுகில் சுமந்தவர்கள். உராய்ந்து உராய்ந்து காயமேற்படுத்திய வடுக்களைப் பாருங்கள்" என தமது முதுகைக் காட்டும் பல பிரமுகர்களுக்கு தெரியாத சங்கதிகள் ஏராளம்**

"யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் முத்திரைச் சந்தைக்குக் கிட்ட அம்பலவாணர் குமாரவேலு என்பவர் காலமாகிவிட்டார். அவரை நாட்டுப்பற்றாளராக அறிவிக்கவும்" இரு வாக்கியங்களில் அரசியல்துறை நடுவர் பணியகத்துக்கு செய்தியை அனுப்பினர். ஒரு போராளி இவரது சாவு தொடர்பாக பொட்டம்மானுக்கு அறிவித்தார். சமாதானம் நிலவிய காலப்பகுதி ஆதலால் அரசியற்துறை நடுவப்பணியகம் நல்லூர் வட்டப் பொறுப்பாளரிடம் காலமானவரின் விபரங்கள் -- போராட்டப் பங்களிப்பு பற்றிய அறிக்கையினை அனுப்புமாறு கோரியிருந்தது. ஏற்கனவே தனது பகுதியில் நிகழும் மரணச் சடங்கு என்ற வகையில் அங்கு போயிருந்தாலும் இம்முறை விபரங்களைப் பெறச் சென்றார் வட்டப் பொறுப்பாளர். திருமதி.குமாரவேலுவைத் தனியாக அழைத்த அவர் தன்னை அறிமுகப்படுத்திய பின் திரு.குமாரவேலுவின் போராட்டம் பங்களிப்புப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைக் கூறி உதவுங்கள் என வேண்டிக் கொண்டார். அதற்கு அவர் "எனது கணவருக்குப் போராளிகளுடன் தொடர்பு இருந்தது என்பதே இப்போது நீங்கள் சொல்லித்தான் தெரிகிறது. உண்மையில் இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்று பதிலளித்தார். நல்லூர் வட்டப் பொறுப்பாளர் குழம்பியே விட்டார். பெண்டாட்டிக்குத் தெரியாமல் கணவர் அப்படி என்ன பங்களிப்புச் செய்திருக்க முடியும். என்று சிந்தித்த அவர் நடுவப் பணியகத்துக்கு விடயத்தைத் தெரிவித்தார்.

**ஆயிரம் முட்டையிட்ட ஆமை அசையாமல் போக ஒரு முட்டையிட்ட கோழி கொக்கரக்கோ என கூவுமாம்**

அவர்கள் தலைவர் பிரபாகரனோடு தொடர்பு கொண்டு நாட்டுப்பற்றாளர் என்று அறிவிக்கக் கோரிய போராளியின் பெயரைக் குறிப்பிட்டு நடந்த விடயங்களையும் தெரிவித்தனர். அதற்குத் தலைவர் அளித்த பதில் "அவர் சொன்ன மாதிரியே அறிவியுங்கள். விபரங்களைப் பிறகு பெற்றுக் கொள்ளலாம். அதனைப் பெற அவரை உங்களுடைய இடத்துக்கு அழைக்க வேண்டாம். முன்கூட்டியே அவருக்கு அறிவித்து அவருடைய இடத்தில் போய் விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது மட்டுமல்ல அவர் இனிமேலும் யாரையாவது இது போன்று அறிவிக்க வேண்டுமெனக் கோரினாலும் இதே நடைமுறையினையே பின்பற்றுங்கள்" என்பதாகும்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்ற வள்ளுவர் வாக்கை அவர் அறிந்திருந்ததாலேயே இவ்வாறு குறிப்பிட்டார். போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் உதவியவர்களை கட்டாயம் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். எனவே இந்த விடயத்தில் காலதாமதம் ஆகிவிடக் கூடாது என்பதே அவரது நிலைப்பாடு. 1982--1983 காலப் பகுதியில் திரு.குமாரவேலு என்னென்ன வகையில் பங்களிப்புச் செய்திருந்தார் என்பது குறித்து சங்கர் என்ற பெயரில் போராளியொருவர் "வேரென வாழ்ந்தவர்" என்ற தலைப்பில் நமது ஈழநாடு பத்திரிகையில் நன்றியோடு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் பொட்டம்மான்-- ஞானம் முதலான போராளிகள் போராட்டத்தில் முழு நேரமாக இணைந்த புதிதில் விசுவமடுவில் இருந்த தனது காணியில் அவர்களைப் பாதுகாத்த விடயமும் அடங்கும். இவ்வளவும் செய்தும் யாழ்ப்பாணத்தில் இருந்த தனது துணைவியாரோடு அவர் இது பற்றி எதுவுமே தெரிவித்திருக்கவில்லை என்பது அவரது சாவின் பின்பே புரியவந்தது.

— மட்டுநகரில் ஒரு பெண்மணி இருந்தார். கல்லாறைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அவர். ஆண்டவனின் மறு பெயரால் அழைக்கப்பட்ட ஒரு போராளியின் சகோதரி. இவரது கணவர் கடமையின் நிமிர்த்தம் பிரபல பாடசாலை ஒன்றில் தங்கியிருந்தார். வாரத்தில் ஓரிரு முறை பகலில் வந்து ஒரு நேர உணவு உண்டு விட்டு பிள்ளைகளுடன் அளவளாவி விட்டுச் செல்வார். குடும்பப் பொறுப்பு முழுவதும் இப் பெண்மணியே சுமந்து வந்தார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த தனது தம்பி படிப்பை இடைநிறுத்தி இயக்கத்தில் இணைந்து கொண்டமை குறித்து சிறிது வருத்தம். இருந்தாலும் அவர் மீதான பாசம் குறையவில்லை. அதனால் தம்பியோடு வரும் போராளிகளை உபசரித்து வந்தார். நாளடைவில் அந்த வீட்டின் இன்னொரு பக்கமாக இருந்த கொட்டகை ஒன்றுக்குள் போராளிகள் தங்கிவந்தனர். தமது கடமையின் நிமித்தம் வெளியில் சென்று வரும் அவர்கள் எத்தனை மணிக்குத் திரும்பினாலும் அங்கே சாப்பாடு தயாராக இருக்கும். அவர்கள் குளிப்பது ஆடை தோய்ப்பது எல்லாம் அந்த வீட்டில் தான். ஒரு நாள் பகல் அப்பெண்மணியின் கணவர் வந்தார். கொடியில் பல சாறங்கள் காய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். "இதென்ன கன சாறங்கள் காயுது. இவ்வளவு சாறம் நம்ம வீட்டில் இல்லையே" என்று கேட்டார். உடனே அந்தப் பெண்மணி சேவையராக இருக்கும் தமது உறவினரின் பெயரைக் குறிப்பிட்டு அவன்ட லேபர் மார் வந்து தங்கினவங்க அவங்கள் தான் தோய்ச்சுக் காயவைச்சிட்டுப் போயிட்டாங்கள்" என்றால். அந்தக் கொட்டகைக்குள் சேவையரின் சாமான்களும் இருந்தபடியால் இவரும் அதை முழுமையாக நம்பிவிட்டுப் போய்விட்டார். (அந்தக் காலத்தில் போராளிகள் பெரும்பாலும் சாறத்துடனேயே திரிந்தார்கள்)

இக் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இனர் தன்னாமுனைப் பகுதியில் ஒரு சிகரெட் வானைக் கொள்ளையடித்திருந்தனர். இது சம்பந்தமாக ஆராய்ந்த காவல்துறையினர் அச்சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். சிங்களவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த போது ஜே.வி.பி என்ற ஒரேயொரு இயக்கம் மட்டுமே இருந்தது. தமிழரிலோ உருவாகியது-- காணாமற்போனது-- கரைந்தது-- கலந்தது-- உடைந்தது என 36 இயக்கங்கள் இருந்தன. ஆனால் எதைப் பிடித்தாலும் புலி எங்கே என்று தான் காவல்துறையினர் கேட்பார்கள். அந்த வகையில் ஆரம்பித்த விசாரணை அந்த இளைஞரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. காசிஆனந்தனின் சகோதரி சிவமலரைக் காட்டிக் கொடுத்தான். தொடர்ந்து திருமணமாகி சில நாட்களே ஆகியிருந்தும் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத் தாக்குதலுக்குச் சாரதியாக பங்காற்றி வந்த தனது சகோதரனை இனங்காட்டினார். அடுத்து இந்த வீட்டில் தான் புலிகள் தங்குவதுண்டு என இப் பெண்மணியின் வீட்டைக் காட்டிவிட்டார். அங்கே அச்சமயம் போராளிகள் எவரும் இருந்திருக்கவில்லை. அங்கே சென்ற காவல்துறையினர் ஏமாற்றமடைந்தனர். அப்போது அந்த இளைஞன் படுவான்கரையில் இன்னொரு வீடு இருக்கிறது என்று சொன்னார். உடனே வந்த காவல் துறையினரில் இருவரை அங்கேயே இறக்கிவிட்டு ஏனையோர் படுவான்கரைக்குச் சென்றனர்.

வீட்டில் இருந்த பெண்மணியையும் பிள்ளைகளையும் அறையொன்றில் தள்ளி இருக்க வைத்துவிட்டு தாமும் உள்ளேயே இருந்தனர். சிறிது நேரத்தில் மட்டக்களப்பின் மூத்த போராளி அங்கே சென்றார். என்ன ஒருவரையும் காணவில்லை என எண்ணியவாறு அவர் உள்ளே செல்லவும் உள்ளே இருந்த காவல்துறையினர் அவரை இழுத்து அறைக்குள் தள்ளினர். உடனே அப் பெண்மணி "என்ன வீடியோ கொப்பி வாங்கவா வந்தீங்க" என்றவாறு அவரின் அருகே வந்திருந்து அவரது இடுப்புப் பகுதியை காவல்துறையினருக்குத் தெரியாமல் தடவிப் பார்த்தார். ஆயுதம் இல்லை என்பது உறுதியாகத் தெரிந்ததும் இப்போதைக்கு அசம்பாவிதம் எதுவும் நடக்காது என உணர்ந்து கொண்டால். சுகமில்லாதவர் போல் நடித்த அப்போராளி சில தடவைகள் இருமி வெளியே சென்று துப்பினார். அடுத்த தடவை வாந்தி வருவது போல் நடித்து வெளியே வந்ததும் பாய்ந்தோடிவிட்டார்.

சிறிது நேரத்தில் அப் பெண்மணியின் கணவர் வந்தார். அவரையும் உள்ளே இருத்தி விட்டனர் அவர்கள். அவருக்கோ எதுவும் புரியவில்லை. தமது வீட்டுக்குள் ஏன் காவல்துறையினர் வந்தனர் என்று பேந்தப் பேந்த முழித்தார். அடுத்து அந்தப் பெண்மணியின் போராளியான சகோதரன் துவிச்சக்கரவண்டியில் கேற்றைத் திறந்த படி வந்தார். அங்கே மூத்த போராளி கொண்டு வந்த துவிச்சக்கரவண்டி காணப்பட்டது. ஆனால் வெளியில் எவரையும் காணவில்லை. உள்ளே போகலாமா விடலாமா என்று சந்தேகம். உள்ளே இருந்த காவல்துறையினர் அவரை உள்ளே கூப்பிடுமாறு வீட்டுக்காரரிடம் கூறினார். அதனால் அந்தப் பெண்மணியின் கணவர் "உள்ளே வரட்டாம்" என்று கூறினார். என்ன உள்ள வரட்டாம் என்று கூறுகிறார் அத்தான். உள்ளே வா என்றே கூப்பிட்டிருக்கலாமே இதில் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று யூகித்த அவர் துவிச்சக்கரவண்டியைப் போட்டுவிட்டு பாய்ந்தோடிவிட்டார்.

திரும்பி வந்த காவல் வாகனம் அனைவரையும் ஏற்றிச் சென்றது. விசாரணையின் போது விக்டர் பெரேரா என்ற எஸ்.பி.யும் பியசேனா என்ற காவல் உத்தியோகத்தரும் கடுமையாக நடந்து கொண்டனர். அப்போது சிறுமியாக இருந்த மகளின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்தபடி "உண்மையைச் சொல்" என்று அப்பெண்மணியை மிரட்டினர். அவரோ எங்களுக்கு எதிலும் சம்பந்தமில்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார். சிறுமியின் தலையில் துப்பாக்கியால் தாக்கினர். மண்டை உடைந்து இரத்தம் வழிந்தது. ஆனாலும் அப்பெண்மணி அசரவில்லை. இதற்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இளைஞர் கொஞ்சம் கூடுதலாகவே சொல்கிறார் என்றும் இப் பெண்மணியின் கணவர் எதுவுமே தெரியாத அப்பாவி எனவும் புரிந்து கொண்டனர். முடிவில் ஆண் பிள்ளைகளை மட்டும் வைத்துக் கொண்டு மூவரையும் விடுவித்தனர்.

தம்மால் இந்தக் குடும்பத்துக்கு இந்த நிலை ஏற்பட்டதே என போராளிகளுக்கு துக்கம். ஆனாலும் மாணவர்களான தமது பிள்ளைகளை எப்படியும் விடுவித்து விடுவர் என்றும் போராளிகள் தப்பியதே தனக்குத் திருப்தி என்றும் இப் பெண்மணி ஒருவர் மூலம் செய்தி அனுப்பினார்.

— வடக்கே திரு.குமாரவேலுவும் கிழக்கே இப்பெண்மணியும் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்தவர்கள். விவிலியத்தில் எபேச்சியார் 5 அதிகாரம் 5 வசனங்கள் 21 முதல் 31 வரை வடக்கேயிருந்த போதகரும் கிழக்கே இருந்த போதகரும் திருமணங்களை நடத்தி வைத்த போது கூறியிருப்பார்கள். "புருசர்களே தங்கள் மனைவிகளை தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூறவேண்டும். தன் மனைவியில் அன்பு கூறுபவன் தன்னில் அன்பு கூறுகிறான். மனிதன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து ஒரே மாமிசமாக இருப்பார்கள்" என்று திரு.குமாரவேலுவின் திருமணத்தில் வாசிக்கப்பட்டிருக்கும். அது போலவே "தெய்வ பயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறது போல உங்கள் சொந்தப் புருசருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருசனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறார்" என்று இப்பெண்மணியின் திருமணத்தின் போது வாசித்திருப்பார்கள். எதிலும் ஒழிவு மறைவில்லாமல் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டும் என போதகர்கள் நிச்சயம் போதித்திருப்பார்கள்.

தமது போராட்டப் பங்களிப்பு குறித்த விடயங்களைத் தவிர ஏனைய விடயங்களில் இருவரும் தமது வாழ்க்கைத் துணைக்கு விசுவாசமாகவே இருந்திருக்கின்றனர். "பிறப்பால் வந்த உறவுகளை விட பிணைப்பால் வந்த உறவுகளே வலிமையானவை" என்ற கருத்துப்பட கண்ணதாசனும் எழுதியிருக்கிறார். ஆயினும் போராட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் தான் இருவருக்குமிடையில் இருந்திருக்கிறது. பல குழந்தைகளைப் பெற்றுத்தந்து தன் குடும்ப பாரத்தைச் சுமந்த மனைவியிடம் கூட இரகசியத்தைப் பேணியிருக்கிறார் குமாரவேலு. பல குழந்தைகளுக்குத் தன்னை அன்னையாக்கி தன்னை முழுமையாக நம்பி "என்ன கன சாறங்கள் காயுது" என்று கேட்ட தன் அப்பாவிக் கணவருக்குப் பொய் சொல்ல வேண்டி வந்ததே என்று அப்பெண்மணி நினைத்திருப்பார். தான் பொய் சொல்லி வாழ்ந்தாலும் தன் கணவருக்கும் இந்தப் போராட்டத்துக்கும் பொய்யாக வாழ-வில்லை என்ற மனநிறைவுடன் அவர் அண்மையில் கண்ணை மூடியுள்ளார்.

வடக்கே என்றாலும். கிழக்கே என்றாலும் எமது மக்கள் ஒரே உணர்வுடன் தான் இருந்துள்ளார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். "ஆயிரம் முட்டையிட்ட ஆமை அசையாமல் போகும். ஒரு முட்டையிட்ட கோழி கொக்கரக்கோ என்று கூவுமாம்" என்று கூறுவார்கள். "நாங்கள் தான் கிழக்கின் தேசியத்தை முதுகில் சுமந்தவர்கள். உராய்ந்து உராய்ந்து காயமேற்படுத்திய வடுவைப் பாருங்கள்" என்று தம்து முதுகைக் காட்டும் பல பிரமுகர்களுக்கு இவையெல்லாம் தெரியாத சங்கதிகள். ஏனெனில் வண்ணை ஆனந்தன் கூறியது போல "பழம் பழுத்தால் வெளவால் வரும்" என்ற மாதிரி நிலையில் வந்தவர்கள். அவர்களது நோக்கம் நிறைவேறிவிட்டது. இதில் போராட்டத்தையும் அதை வழி நடத்தியவர்களையும் கிண்டல் செய்து கொச்சைப்படுத்துகிறார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளும் அப்படித்தான். ஜே.வி.பி மற்றும் அதாவுல்லாவின் நிலைப்பாட்டில் உள்ளார்கள். வடக்கு வேறு கிழக்கு வேறு வடக்கில் எடுக்கும் தீர்மானங்கள் போல கிழக்கில் நாம் எடுக்கத்தேவையில்லை என கல்விமான்களும் சட்டத்தரணிகளும் நினைக்கிறார்கள். வடக்கே வந்து போராடிய போராளிகளின் குடும்பங்களும் கிழக்கே சென்று போராடிய போராளிகளின் குடும்பங்களும் கண்ணீர் வடிக்கின்றனர். குறைந்த பட்சம் எமது பிள்ளைகளைப் பயங்கரவாதிகள் என்றாவது சொல்லாமல் இருங்கள் என்று கூறுகின்றனர்.

ஆனால் அவர்கள் ஒலிவாங்கியைத் துடைத்துவிட்டு என்ன பாட்டைப் பாடி அடுத்த தேர்தலுக்கு வாக்கு கேட்பது என்று சிந்தித்த படி புறப்பட்டு விட்டார்கள். பாவம் காசி ஆனந்தன் அவரது வரிகள் இவர்களது வாயில் புகுந்து தம் கற்பை இழக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 76



# தனித்துவம்

(வி.என்.சந்திரகாந்தி)



இறைவனது படைப்பிலே உயிரினங்கள் அனைத்துக்குமே தனித்துவமான பண்புகள் உண்டு. அவ்வவற்றின் தனித்துவமான பண்புகளாலேயே அவை சிறந்து விளங்குகின்றன. யானையின் தனித்துவம் அதன் பிரமாண்டமும் பலமும் ஆகும். வேங்கை சிறுத்தை ஆகியவற்றின் தனித்துவம் அவற்றின் வேகமும் வேட்டையாடுதலை முன்னிட்ட மன ஓர்மமுமாகும். தாவர பட்சணியான ஒட்டகச்சிவிங்கி, குதிரை, மான், மரை, முயல் ஆகியன மாமிச பட்சணிகளிடமிருந்து தம்மை காப்பாற்றிக்கொள்ளுமளவுக்கு விவேகமும் பாய்ச்சலில் வேகமும் கொண்டவை. அதே போன்று தென்னை பனை கித்துள், பேரீந்து போன்ற மரங்கள் உயரமாக வளர்கின்றன. இவை யாவுமே சில உதாரணங்களுக்காக நோக்கப்பட்டாலும், இவ்வுலகில் வாழும் அற்ப உயிரினங்களுக்கு கூட அவ்வவற்றிற்கென தனித்துவம் உண்டு. அதனாலேயே அந்த உயிரினங்கள் எல்லாம் இப் பூவுலகில் நீடித்து நிலைத்திருக்கின்றன.

உலகுக்கென்று ஒரு சரித்திரம் இருக்கின்றது. எதிர்காலத்தில் வேறுபட்ட சரித்திரம் அமையவிருக்கின்றது. இதற்கெல்லாம் அடிப்படையே ஒவ்வொருவரினதும் வெவ்வேறு பட்ட தனித்துவ பண்புகளே. மனிதர்கள் அனைவருமே ஒத்த பண்புகளை உடையவர்களாக இருந்தால் மாற்றங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் உலகில் இடம் இருக்காது. மனித குலத்தில் அவரவர்க்கென்று உரித்தான தனித்துவமே புதிய கண்டு பிடிப்புக்களுக்கும் சமூக அரசியல் மேம்பாடுகளுக்கும் வித்தாக இருந்துள்ளன.

இது எதனை எடுத்தியம்புகின்றது என்றால் நாம் எமது தனித்துவத்தை பேணும் அதே சமயம் பிறரது தனித்துவத்துக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும்.

பெற்றுக்கொண்ட அனுபவங்களுக்கு ஏற்ப எமது அபிப்பிராயங்கள் பிறரது கருத்துக்களுடன் மாறுபடும். நாம் வேட்டியும் 'நஷனலும்' அணிவதை வழக்கமாக கொண்டிருக்கலாம். மற்றவர்கள் 'பான்ட்டும்' 'சேட்டும்' அணிபவர்களாக இருக்கலாம். அதனாலென்ன? பெரும் பாலும் சேலை அணிந்த பெண்கள் இன்று 'லெக்கின்ஸ்' அணிவதையே விரும்புகின்-றார்கள். அது அவர்களது இஷ்டம்! .

இனி எம்மில் பலர் மத்தியில் பெரும் தவறு ஒன்று உண்டு. அது எமது நிலைப்பாடுகளை சரியென்று எண்ணுவதும் அவற்றை மற்றவர்கள் மீது திணிக்க முற்படுவதும். எமது நிலைப்பாட்டில் நாம் நிற்பதில் தவறொன்றும் இல்லை. அது எமது தனித்துவத்திற்கான அடையாளமாகும். ஆனால் அதனை மற்றவர்கள் மீது திணிக்கும் அதிகாரத்தை எமக்கு யார் வழங்கினார்கள்? இன்னும் சொல்லப்-போனால் பிறர் அபிப்பிராயங்களை நாம் எப்படி மறுதலிக்க முடியும்? எமது பிடிவாதம் பிறரை எமக்கெதிராக திருப்புவதிலேயே முடியுமல்லவா?

அதனை இன்னுமொரு வகையில் நோக்கலாம். உயிரியல் பாடத்தில் ஆர்வமும். கலைத்துறையில் பற்றுங்கொண்ட இரு மாணவர்களை எடுத்துக்கொண்டால். இவ்விருவரில் யாராவது ஒருவர் தம் நிலைப்பாட்டை மற்றவர் மேல் திணித்திருக்க கூடுமா? ஒருவர் வைத்தியராக வருவதற்கான தனித்துவத்தை கொண்டவர். அடுத்தவர் சிறந்த நடிகராக வருவதற்கான தனித்துவத்தை கொண்டவர். இருவருமே சமூகத்திற்காக் சேவை செய்யும் ஆற்றல் படைத்தவர்களே! ஆனால் அவரவருக்கான தனித்துவத்தை வெவ்வேறு வழியில் வளர்த்துக்கொண்டவர்கள்.

பிரபஞ்சமே வெடிப்பில் இருந்து தோன்றியது தான் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அது போன்று மாறுபட்ட அபிப்பிராயங்கள் ஒன்றுக்கொன்று அடிபணியாமல் மோதிக்கொள்ளும் நிலையில் தான் சமூக மேம்பாடுகள் நிகழ்ந்துள்ளன. கண்டுபிடிப்புக்கள் ஒவ்வொன்றுமே தனித்துவத்தின் வெளிப்பாடே. எமது மனப்பதிவும், முன்அனுபவமும் மனிதனால் பறக்க முடியாது என்று உணர்த்துகின்றன. எமது இக்கருத்தை நாம் 'ரைட்' சகோதரர்கள் மீது திணித்திருந்தால் விமானம் கண்டுபிடிக்கபட்டிருக்குமா? மாறுபட்ட மனோபாவம் கொண்டவர்களாலேயே உலகம் முன்னேறியது. மனித குலம் பிறகோள்களை நாடிச்சென்று கால் பதிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

நாடுகள் கூட தத்தமக்கென தனித்துவத்தை கொண்டு முன்னேறுகின்றன. அமெரிக்காவும் ரஸ்யாவும் விஞ்ஞானத்திலும் விண்வெளி பயணத்திலும் அதிக தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றன. சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் உற்பத்தி துறையில் அதிக சாதனைகள் புரிகின்றன. இந்தியா விவசாயத்தில் நாட்டம் காட்டுகின்றது. இப்படியே உலகில் உள்ள நாடுகள் அனைத்துமே தமக்கான தனித்துவத்தை காட்டி வளர்ச்சி பாதையில் செல்கின்றன.

நாம் எமது தனித்துவத்தை வளர்க்கவேண்டும். சமுதாயம் தனக்கென சில கோட்பாடுகளை காலம் காலமாக கட்டி வைத்திருக்கும். நாம் அவை எவற்றிற்கும் அடிபணியக்கூடாது. புத்தருக்கு இராஜபோகம் கிட்டியது. இன்பத்திலும் சொகுசு வாழ்க்கையிலும் மூழ்கியிருந்தார். ஆனால் வயோதிபமும் மரணமும் மனிதனுக்கு துன்பத்தை கொடுக்கின்றன என கண்டபோது தனித்துவமான முறையில் சிந்தித்தார். ஆசைதான் அனைத்து துன்பங்களுக்கும் காரணம் என்பதை அறிந்து சொன்னார்.

அதே போன்று சுவாமி விவேகானந்தர் ஆங்கில கல்வியில் மோகம் கொண்டிருந்தார். ஆனால் அவரது தனித்துவம் இறைவன் ஒருவன் இருக்கின்றானா என அறிய ஆவல் கொண்டது அவரது ஆசிரியர்களால் அவரது வினாக்களுக்கு பதில் கூற முடியவில்லை.

ஆனாலும் அவர்கள் அந்த மாமனிதனின் தனித்துவத்தை முடக்கவில்லை அவருடைய கேள்விகளுக்கு விடை கூறக்கூடிய ஒரே மனிதர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் என்பதை அவருக்கு எடுத்துக்கூறினர். விவேகானந்தரும் இராமகிருஷ்ணரை சந்தித்து உபதேசம் பெற்றார். இந்த உலகமே மெச்சுமளவிற்கு பெரும் மகான் ஆனார்.

எமது கருத்தை அளவு கோலாக கொண்டு மற்றவர்களை தூற்றுவது பரிகசிப்புக்கு இடமாகக் கூட போய்விடலாம். இப்படித்தான் உடை அணியவேண்டும். இன்ன இன்ன உணவுகளைத்தான் சாப்பிட வேண்டும். கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் அவற்றின் மீது பிடிவாதம் பிடித்தலாகாது.

எமது தனித்துவம் சமுதாய மேம்பாட்டிற்கும் உலக முன்னனேற்ற-த்திற்கும் வழிவகுப்பதாக இருக்க வேண்டும். சர்வாதிகாரம், முதலாளித்துவம், பெண் அடிமை, சாதியம், நிறவேற்றுமை ஆகியவற்றிற்காக போராடியவர்களின் தனித்துவத்தை எடுத்துப்பாருங்கள்.

எமது தனித்துவத்தை பேணுவதற்காக நாம் பெரும் படையை திரட்டி போராடவேண்டும் என்று இல்லை ஆனால் எமது அபிப்பிராயத்தை வெளிக்காட்ட நாம் தயங்க கூடாது. சந்தர்ப்பம் ஏற்படும் போது பிறர் என்ன சொல்வார்களோ என்ற பயம் இன்றி களத்தில் முன்செல்ல வேண்டும். எமது வீரத்திற்கும் தைரியத்திற்கும் அது முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆகியோரிடம் இந்த நாடும் மக்களும் பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டு கிடந்தன.. புதுப்புது நாடுகளை கைப்பற்றுவதில் அவர்கள் தனித்துவமானவர்களாக இருந்தார்கள். எமது செல்வங்களை அள்ளிச்சென்றார்கள். எமது மக்களை அடிமைகளாக நடாத்தினார்கள். அவர்களிடம் ஆயுத பலம் இருந்தது. ஆனாலும் இந்த மண், எமது தாய் மண் அவர்களுக்கு விலை போய்விடவில்லை. காரணம் இந் நாட்டு மக்களின் தனித்துவமான தேசப்பற்று... சுதந்திர வேட்கை...

மகாத்மா காந்தி அகிம்சை வழியில் வெள்ளையர்களுக்கு எதிராக மக்களை ஒன்று கூட்டி போராடினார். சுபாஷ் சந்திரபோஸ் ஆயுத போராட்டத்திற்கு முனைப்பு காட்டினார். மக்கள் தம் தனித்துவத்தை இழக்காமல் இருக்க வேண்டும். உள்ளத்தால் அடிபணியக்கூடாது. சமுதாய விடுதலை தானே கிட்டும்!. அந்த நிலையில் தான் வெள்ளையர்கள் இந்தியாவையும், இலங்கையையும் திரும்ப ஒப்படைத்துவிட்டு தமது நாடுகளுக்கு திரும்பினர்.

மகாத்மா காந்தி தனி நபராக இருந்துகொண்டே தென் ஆபிரிக்காவில் இன அடக்கு முறையை எதிர்த்து வெற்றி பெற்றார். அவரை எதிர்த்த வெள்ளையர்களே அவர் கோட்சேயினால் சுடப்பட்ட போது 'எமது இளவரசர் இறந்துவிட்டார்' என இரங்கற் செய்தி அனுப்பினர். அந்த முன்னுதாரணத்தை நாம் ஒவ்வொருவருமே பின்பற்றி தனித்துவத்துடன் வாழ்வதே வெற்றிக்கு வழியாகும்

அனைத்து மூன்று இனத்தவருமே தத்தம் தனித்துவத்துடன் வாழ்வதே சிறப்பு. ஒரு இனம் மற்ற இனத்தை அதன் தனித்துவத்தை மூழ்கடிக்க கூடாது! அப்படி செய்வதால் எந்த இனத்துக்கும் உயர்வு கிட்டப்போவதுமில்லை.!

---

# பெண்களே இரவில் கவனமாக இருங்கள்!!




திருகோணமலையில் டொக்யாட் வீதியில் இடம்பெற்ற ஓர் சம்பவம்....

அக்குடும்பத்தில் இரு ஆண் பிள்ளைகளும் செல்லப்பிள்ளையாக ஓர் பெண் பிள்ளையும் இருந்தனர். அன்பான குடும்பம் அளவுக்கதிகமான பணத்துடன் ஆனால் ஆடம்பரம் இல்லாத வாழ்க்கை அவர்களுடையது. தந்தை கப்பலில் பணியாற்றுகின்றார். தாய் வீட்டில் பிள்ளைகளுடன் இருப்பவர். பிள்ளைகளில் மூத்தவன் உயர்தரம் முடித்து தன் நண்பர்களுடன் காலத்தை கழித்து வந்தான். ஏனைய இருவரும் படித்துக் கொண்டிருந்தனர்.

படிப்பில் மிகவும் கெட்டிக்காரியான கவிதா அடுத்த வருடம் எழுதவிருக்கும் சாதாரண தர பரீட்சைக்கு தற்போதிருந்தே தன்னை தயார் படுத்துக் கொண்டிருந்தாள். இரவு வேளையில் அதிக நேரம் முழித்திருந்து உறங்க செல்வது அவள் மாத்திரமே.

அன்று மிகவும் புழுக்கமாக இருந்தமையால் அவள் கதவைத் திறந்து வெளியே போட்டிக்கோவிற்குச் சென்று நடந்த வண்ணம் படித்துக் கொண்டிருந்தாள். தன்மீது யாருடையதோ கை வருடிக் கொடுப்பதை உணர்ந்தாள். உடன் சுதாகரித்தவள் இன்று பார்த்த நாடக காட்சி தான் ஞாபகத்திற்கு வருகிறது என எண்ணியவாறு தொடர்ந்து படித்தாள். ஆனாலும் என்றுமில்லாதவாறு அன்று அவள் சிந்தனை குழம்பிய வண்ணம் இருந்தது. சத்தமிட்டு படிக்கலானாள்.

சற்று நேர அமைதிக்குப் பின் மீண்டும் அவளை ஏதோவொன்று குழப்பியது. யாரையோ தன் அருகில் உணர்ந்தாள்.

குளிர் கலந்த தென்றல் வீசி அவளை நிலை குலையச் செய்தது. ஏன்? என எண்ணத் தோன்றவில்லை. அனுபவித்தாள். தன்னை மறந்தாள். மெலிதாய்ச் சிரித்தாள். அடுத்த கணம் வியர்த்துக் கொட்டியது. திடுக்கிட்டாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்.

தனது புத்தகங்கள் அனைத்தையும் கட்டி அணைத்தவாறு வீட்டினுள் சென்று தன் அறைக்குச் சென்றாள். தனக்கு நடந்ததை அறிய முடியாமல் தவித்தாள்.

விடிந்தது உறக்கமின்மை, பயம் அனைத்தும் இணைந்து அவளது உடல் வெப்பத்தை அதிகரித்திருந்தது. தன்னையும் அறியாமல் அனுங்கினாள். கவி இன்னும் எழும்பவில்லையா என கூப்பிட்டவாறு அறைக்குள் வந்த அம்மா தன் மகளின் நிலையைப் பார்த்து அதிர்ச்சியுற்றாள்.

சிகிச்சை அளிக்கப்பட்டது. தாய் கண்ணும் கருத்துமாய் அவளைக் கவனித்தாள். மாலை 6 மணி இரவு 12 ஆகியது. நன்கு உறக்கத்தில் இருந்த அவளது கண்கள் மட்டும் விழித்தன. எழுந்திருக்கக் கூட முடியாதிருந்தவள் தானே எழுந்து வெளியில் சென்றாள். அவள் அவளாக இருக்கவில்லை. யாரோவாக இருந்தாள். காதல் வயப்பட்டவள் போல் மெல்லிய சிரிப்புடன் காணப்பட்டாள். அவள் கண்கள் மூடியிருந்தன.

அன்று இரவு நேர படத்திற்குச் சென்றிருந்த மூத்தவன். அம்மா திட்டுவாள் என பயந்தவாறு மோட்டார் சைக்கிளை அணைத்துவிட்டு மெல்ல வளவிற்குள் நுழைந்தான். தன் தங்கையை பார்த்ததும் ஒரு கணம் அசையாது நின்று பார்த்திருந்தான். அவள் சரியாக இருக்கவில்லை. மெல்ல அம்மாவை தொலைபேசி மூலம் அழைத்து விடயத்தைக் கூறினான். எழுந்து வந்த அம்மா கவியின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தாள். பின் பிடரிப்பக்கமாக தலைமுடியை இழுத்துச் சென்று தலைக்கு தண்ணீர் ஊற்றினாள். பாவம் கவி மயங்கிப் போனாள். ஏற்கனவே அதி கூடிய காய்ச்சலில் இருந்த அவளது அங்கம் நெருப்பாய்க் கொதித்தது.

நடந்தவற்றை விசாரித்த போது தான் அன்று அவள் தலைக்க முழுகி மிகுந்த நறுமணத்தோடு வெளியில் நன்று படித்திருந்தமையும், சிங்களத்தில் களு குமாரயா என அழைக்கப்படும் ஒன்றின் பார்வை அவளில் பட்டிருப்பதும் தெரிந்தது. பின் அதற்கான பரிகாரங்கள் செய்து தன் கூடவே வைத்துப் பாதுகாத்தாள் அந்தத் தாய்.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் "சதுரன்"

### கே.ராஜீவ் பிரசாத் இயக்கத்தில் ரஜாஜ் ,வர்ஷா நடிக்கும்

ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக பயணிக்கும் கிரைம் த்ரில்லர் இது. வேகமான கதையோட்டம், தெளிவான காட்சியமைப்பு, பார்வையாளர்களைச் சோர்வடையச் செய்யாமல் பார்க்க வைக்கும் சாதுர்யம் என வந்திருக்கிறது சதுரன்.

கதையின் நாயகன் ரஜாஜ் சென்னையில் ஒரு ஆட்டோ டிரைவர். அவரது நண்பர்களான காளி வெங்கட் உள்ளிட்டோர் அதே ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ டிரைவர்களாக இருக்கிறார்கள்.

பியூட்டி பார்லரில் பணிபுரிபவர் நாயகி வர்ஷா. அவரது தொலைந்து போன நாய்க்குட்டி முதல் ஐநூறு ரூபாய் நோட்டு வரை தேடிச் செல்லும் ரஜாஜ், வர்ஷா மேல் காதல் கொள்கிறார். ஆனால் வர்ஷா அவரை கண்டுகொள்வதாக இல்லை.

இந்நிலையில், வெளியூர் கூலிப்படையைச் சேர்ந்த இரண்டு பேர் சென்னை வந்து இறங்குகிறார்கள். ஒரே இரவில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நபர்களை அடுத்தடுத்து கொலை செய்கிறார்கள். அத்தனை கொலைப்பழியும் சம்பந்தமே இல்லாத ரஜாஜ் மீது விழுகிறது.

இறுதியில், ரஜாஜின் அப்பாவையும், நாயகி வர்ஷாவையும் கொல்ல முயற்சி நடக்கிறது. அவர்களை ரஜாஜ் காப்பாற்றினாரா? கொலையாளிகளிடமிருந்து அவர் தப்பினாரா? கூலிப்படையினரை ஏவி கொலைகளை நிகழ்த்துவது யார்? எதற்காக? என்பதை பரபரப்பாக சொல்லுகிறது மீதிக்கதை.



நாயகனாக நடித்திருக்கும் ரஜாஜ் இதில் சிறப்பாக நடித்திருக்கிறார். ஒரு ஆட்டோ டிரைவருக்கான தோற்றம் இவருக்கு கச்சிதமாக பொருந்திருக்கிறது. நாயகியாக வரும் வர்ஷா அழகாக இருக்கிறார். அசப்பில் நஸ்ரியா போல் தெரிகிறார். நாயகன் மீது வெறுப்பு காட்டும் காட்சிகளில் சிறப்பாக நடித்திருக்கிறார்.

விறுவிறுப்பான திரைக்கதை, சிறப்பான திருப்பங்கள் ஆகியவை படத்திற்கு பலமாக அமைந்திருக்கிறது. ஆனால் கிளைமாக்ஸை சுருக்கி-யிருந்தால் கூடுதலாக ரசித்திருக்கலாம்.

மொத்தத்தில் சதுரன் இரண்டாம் பாதியை போலவே முதல் பாதியிலும் கொஞ்சம் திரைக்கதையில் கவனத்தை செலுத்தியிருந்தால் ஒரு நிறைவான படமாக வந்திருக்கும்.

## வசூலை அள்ளும் 'நானும் ரௌடி தான்'

விக்னேஷ் சிவன் இயக்க்த்தில் விஜய் சேதுபதி, நயன்தாரா, ஆர்.ஜே.பாலாஜி, பார்த்திபன், மன்சூர் அலிகான், உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகி இருக்கும் படம் நானும் ரவுடிதான். அனிருத் இசையமைத்திருக்கும் இப்படத்தை தனுஷ் தயாரித்திருக்கிறார். ரசிகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில் இப்படத்துக்கு ஏகோபித்த வரவேற்பு கிடைத்திருக்கிறது. அத்துடன் வசூலிலும் பட்டையைக் கிளப்பி வருகிறது. இதனால் பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறார் தனுஷ்.

இப்படம் முதல் நாளில் 2 கோடியே 16 லட்சம் வசூல் செய்திருக்கிறது. விஜய் சேதுபதி படங்களில் அதிகமாக வசூல் செய்திருக்கும் படம் இது என்று பெருமிதத்துடன் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறார் தனுஷ்.



**விஜய் மில்டனின் இயக்கத்தில் வெளியான "10 எண்றதுக்குள்ள" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



## மனம் திறந்த விக்ரம்

இந்திய சினிமாவின் சிறந்த நடிகர்களில் விக்ரமும் ஒருவர். இவர் நடிப்பில் 10 எண்றதுக்குள்ள படம் திரைக்கு வந்தது. இப்படத்தின் சிறப்பு நிகழ்ச்சிகாக ஒரு தொலைக்காட்சியில் விக்ரம் கலந்து கொண்டார். இதில் பேசிய விக்ரம் தன் காதல் மனைவியை பற்றி முதல் முதலாக பேசியுள்ளார். இவர் பேசுகையில் நான் என் மனைவியை முதன் முதலாக பார்த்த போதே, சினிமாவில் காட்டுவது போல் பல்ப் எல்லாம் மனதிற்குள் எரிந்தது. எங்களுக்குள் அப்படியே பேசி, பழக காதல் மலர்ந்து விட்டது என மிகவும் நெகிழ்ச்சியுடன் கூறினார்.



## ஸ்ருதிஹாசன் கனவை நிறைவேற்றிய பிரபல நடிகர்

ஸ்ருதிஹாசன் தான் தற்போது தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகை. விஜய், அஜித், சூர்யா என அனைத்து முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்து விட்டார். இந்நிலையில் இவர் வேதாளம் படத்தின் சிறப்பு நிகழ்ச்சியில் பேசுகையில், நான் அனைவருடனும் நடித்து விட்டேன். அஜித்துடன் நடிக்க வேண்டும் என்பது என்னுடைய கனவு, எப்போது நிறைவேறும் என காத்திருந்த தருணம், இந்த வாய்ப்பு அமைந்தது, இன்னும் இதுபோல் பல படங்கள் அவருடன் சேர்ந்து நடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் என கூறியுள்ளார்

## விஜய்யும் இல்லை அஜித்தும் இல்லை,

தமிழ் சினிமாவில் இந்த வருடம் விரல் விட்டு எண்ணி விடலாம் ஹிட் படங்களை. அந்த வகையில் அனைத்து தரப்பினருக்கும் லாபம் தந்த படங்கள் என்றால் எண்ணிக்கை இன்னும் குறையும். இந்நிலையில் விஜய்யின் புலி, அஜித்தின் என்னை அறிந்தால் ஆகியவை எதிர்ப்பார்த்த வசூலை தரவில்லை. இந்த வருடத்தில் அதிக லாபம் கொடுத்த படம் தனி ஒருவன் தானாம். இப்படம் கிட்டத்தட்ட ரூ 75 கோடி வரை வசூல் செய்துள்ளது. அதேபோல் ரோமியோ ஜூலியட் படமும் ரூ 30 கோடிகளுக்கு மேல் வசூல் செய்ய, இந்த வருடத்தில் வசூல் நாயகன் தற்போது வரை ஜெயம் ரவி தானாம்.........

## சூர்யாவின் பதிலடி



நடிகர் சங்க தேர்தலில் வெற்றிப்பெற்ற வி'ால் பல அதிரடி முடிவுகளை எடுத்து வருகிறார். இந்நிலையில் பாண்டவர் அணிக்கு பலரும் தங்கள் வாழ்த்துக்களை கூறி வருகின்றனர்.நடிகர் சூர்யா நேற்று தன் வாழ்த்தை பாண்டவர் அணிக்கு தெரிவித்துள்ளார். இதோடு மட்டுமில்லாமல், ராதிகா, சரத்குமார், ராதாரவிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சில கருத்துக்களை கூறியுள்ளார்.ஏனெனில் சரத்குமார் பிரச்சாரத்தின் போது சிவக்குமார் அவர்களை திட்டியது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## BlackBerry யின் அறிமுகம்



Black Berry நிறுவனம் நீண்ட இடைவெளிக்கு பிறகு புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது.


BlackBerry Priv எனும் இக் கைப்பேசியானது 5.4 அங்குல அளவுடையதும், 2560 x 1440 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Hexa Core Snapdragon 808 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM என்பனவற்றுடன் 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. இவை தவிர 18 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக 5 மெகாபிக்சல்களை உடைய கமெரா, 3410 mAh என்பவற்றினையும் கொண்டுள்ளது.

## Google Photos

கூகுள் நிறுவனமானது கடந்த மே மாத இறுதியில் புகைப்படங்களை ஒன்லைனில் சேமித்தல், எடிட் செய்தல் மற்றும் பகிருதல் போன்ற வசதிகளை தரக்கூடிய Google photos சேவையினை அறிமுகம் செய்திருந்தது. ஐந்து மாதங்களில் ஒட்டுமொத்தமாக 3,720 ரெறாபைட் வரையான புகைப்படங்கள் இச் சேவையினூடாக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித மனமறியும் நவீன ரோபோக்கள்

தற்போது மனிதர்களின் வேலைகளை செய்யக்கூடியதும், வாகனங்களைச் செலுத்தக்கூடியதும், மனிதர்களுக்காக போராடக்கூடியதுமான பல்வேறு ரோபோக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் முதன் முறையாக மனிதர்களின் மனங்களை அறியக்கூடிய ரோபோக்களை அமெரிக்காவின் உயிரியல்துறை பொறியிலாளர்கள் உருவாக்கியுள்ளனர். 'Psychic Robot' என அழைக்கப்படும் இவை கணித ரீதியான செய்முறையினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.




## இன்ஸ்டாகிராம் படங்களை ரசிக்க அருமையான வழி!

இன்ஸ்டாகிராமில்(Instagram) நீங்கள் இருக்கும் இருப்பிடத்தை தெரிவித்தால், அங்கு நீங்கள் எடுத்த புகைப்படங்களை உங்களுக்கு சுட்டிக்காட்டும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம் இன்ஸ்டாகிராம் ஒளிப்படங்களை, அவை எடுத்து வெளியிடப்பட்ட இடங்களின் அடிப்படையில் உலக வரைபடம் மீது சுட்டிக்காட்டுகிறது.உங்களுக்கு விருப்பமான இடங்களைத் தெரிவு செய்து, அங்கு எடுக்கப்பட்ட படங்களைப் பார்த்து ரசிக்கலாம். இடத்தைத் தெரிவு செய்த பின் அதில் உள்ள Camera Icon - I- Click செய்தால் ஒளிப்படங்கள் "தம்ப்நெய்ல்" (Thumpnail) காட்சிகளாக வரைபடம் மீது தோன்றுகின்றன. அதோடு பார்த்து ரசித்த படங்களைச் சமூக வலைதளங்களில் பகிரவும் செய்யலாம்.

OTHER


## உலகின் மிகவும் பாரம் குறைந்த உலோகம் உருவாக்கம்



விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக பல்வேறு வியத்தகு கண்டுபிடிப்புக்கள் நாள்தோறும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக தற்போது உலகிலேயே மிகவும் பாரம் குறைந்த உலோகம் உருவாக்கப்பட்டுள்ளது. Microlattice என அழைக்கப்படும் இந்த உலோகமானது முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட Styrofoam எனும் உலோகத்தினைவிட 100 மடங்கு பாரம் குறைந்ததாகும். இது 99.99 சதவீதம் வளி நிரம்பியதும், 100 நனோமீற்றர்கள் தடிப்பம் உடையதுமான சிறிய உலோக குழாய்களை இணைத்து உருவாக்கப்-பட்டுள்ளது. அதாவது இக் குழாய்கள் மனிதனின் தலை முடியின் தடிப்பை விடவும் 1000 மடங்கு மெல்லியதாக காணப்படுகின்றது. இவ் வகை உலோகமானது எதிர்காலத்தில் விமானங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உலகின் முதலாவது 3டி கார்

தற்போது 3டி பிரிண்டிங் தொழில்நுட்பமானது அனைத்து துறைகளையும் படிப்படியாக ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது. Apparently James Beswick என்பவரால் 3டி கார் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக் காரானது ரிமோர்ட் கன்ரோலர் மூலம் இயங்கும் கார்களிலேயே மிகவும் வேகம் கூடிய காராக காணப்படுகின்றமை விசேட அம்சமாகும். 4 அடிகள் வரை நீளமானதாகக் காணப்படும் இக்கார் மணிக்கு 189கி.மீ எனும் வேகத்தில் பயணம் செய்யக்கூடியதாக இருக்கின்றது



## கடலில் மாசுபடிந்துவிட்டதா? இதோ சுத்தம் செய்யும் நீச்சல் ஆடை

கடலின் மாசுபாட்டை சுத்தம் செய்யும் வகையில் நீச்சல் ஆடை ஒன்று வடிமைக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் ஆடை கடலில் பரவியுள்ள எண்ணெய் மற்றும் இரசாயன கழிவுகளை 25 மடங்கு உறிஞ்சும் தன்மை வாய்ந்தது. இது 'ஸ்பாஞ்ஜ்' போன்ற தன்மையுள்ள துணியால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் இருக்கும் 3டி பிரிண்ட்கள் பல்வேறு முயற்சிகளுக்குப் பின் அலை போன்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத துணி வகையில் குறைந்த செலவில் இது தயாராகியுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் சார்பில், வடிவமைக்கப்பட்ட இந்த ஆடை தொழில்நுட்பங்கள் தொடர்பான போட்டியில் முதலிடத்தை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.


## பயர்வாலின் பயன்பாடு

Firewall என்பது ஒரு நமது கணனிக்கும், இணையத்துக்கும் இடையே அரணாக உள்ள பகுதியாகும். இது பொதுவாக மென்பொருளாகவோ அல்லது வன்பொருளாவோ அல்லது இரண்டும் சேர்ந்ததாகவோ இருக்கும்.

அதாவது நமது கணனியை தாக்கவரும் ஒரு Programme-யினை தடுக்கும் ஒரு Hardware அல்லது Software Programme ஆகும்.

பயர்வாலின் பணி

பயர்வால், நம் கணனியில் நுழைந்து, தனி நபர் தகவல்களைத் திருடும் ஹேக்கர்களிடமிருந்து நம் கணனியை பாதுகாக்கிறது.




Windows Operating System ங்களிலும் மைக்ரோசொப்ட் நிறுவனம் பயர்வால் ஒன்றைத் தந்து, அதனை அவ்வப்போது தானாகவே Update செய்து வருகிறது. ஆனாலும் விண்டோஸ் இயங்கும் கணனிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

ஏனென்றால், உலகெங்கும் விண்டோஸ் இயங்கும் கணனிகள் தான் ஹேக்கர்களின் இலக்குகளாக உள்ளன.

நமக்குத் தெரியாமல், நாம் உணராமல், நம் கணனி இயங்குகையில், உள்ளே நுழைந்திடும் ஹேக்கர்களின் முயற்சியை முறியடிப்பதும், தடுப்பதுமே பயர்வால் ஒன்றின் செயல்பாடு.

இது கணனி உள்ளேயே இருந்து கொண்டு இந்த பணியில் ஈடுபடுவதால், இதனை உள்நிலைப் பாதுகாப்பு என அழைக்கின்றனர்.

அத்துடன், Worms, Virus மற்றும் Spam என அழைக்கபடும் கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களை மற்ற கணனிகளுக்கு செல்ல-விடாமல் தடுக்கும் பணியையும் மேற்கொள்கின்றன.

# HTML தமிழில்....

## கிடைக்கோடுகள்

மேலும் கிடைக்கோடுகள் பற்றி ஆராய்ந்து கற்கலாம்.

2. கிடைக்கோடுகள் (Horizontal Rules)

<HR, என்ற கிடைக்கோட்டுக் குறி ஒட்டு, ஒரு கிடைக்கோட்டினை உருவாக்குகிறது.

ஒரு ஆவணத்தின் முக்கியப் பகுதிகளைப் பிரித்துக்காட்ட கிடைக்கோட்டுக் குறி ஒட்டு(<HR, tag) பயன்படுகிறது.

<HR, குறி ஒட்டைப் பயன்படுத்தி வரையப்படும் கோட்டின் தடிமனைக் கூட தீர்மானிக்க முடியும்.

அவ்வாறு செய்வதற்கு <HR, குறி ஒட்டுடன் சில பண்புகளைச் சேர்க்க வேண்டும்.

SIZE மற்றும் NOSHADE என்பவை <HR, குறி ஒட்டுடன் அடிக்கடி பயன்படுத்தப்படும் பண்புகளாகும்.

வரையப்படும் கோட்டின் தடிமனைக் குறிக்க SIZE பண்பு பயன்படுகிறது.

NOSHADE பண்பு வரையப்படும் கோட்டை சாம்பல் நிறத்தில் (நிழலகற்றி) காட்டப் பயன்படுகிறது.

கவனிக்க: <HR, முடிவு குறி ஒட்டு இல்லை.

உதாரணமாக இந்த ஆவணத்தைப் பாருங்கள்..




```
<HTML,
<HEAD,
<TITLE, Horizontal Rules</TITLE,
</HEAD,
<BODY,
கிடைமட்ட கோட்டின் தடிமனைக் காட்ட--,
<HR size="5",
கிடைமட்ட கோட்டின் சாம்பல் நிறத்தை தவிர்க்க-
<HR size="5" noshade,
</BODY,
</HTML,
```

மேற்கண்ட HTML நிரல்வரிகளுக்கான வெளிப்பாடு...

1. கிடைமட்டக்கோடு கோடு ஈர்சு,

2. கிடைமட்டக் கோட்டின் தடிமன் ஐந்து புள்ளிகள் அதிகரிக்கப்பட்டிருக்கிறது... மேற்கண்ட வரியில் size="5" என்பதற்கு பதில் உங்களுக்கு விருப்பமான எண்ணை உள்ளிடலாம். எண்ணின் மதிப்பு அதிகரிக்க கோட்டின் தடிமன் அதிகமாகும்.

3. கிடைமட்டக் கோட்டில் வரும் சாம்பல் நிற நிழலை(shade)த் தவிர்க்க "no shade" என்ற சிறப்புப் பண்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோல் நிறைய வடிவூட்டல் குறிஒட்டுகள் HTML ஆவணத்தில் பயன்படுத்தலாம்.

நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இதழில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சர மீன்

சிறு கதை

கார்த்திகை செல்வி

தொம்சனின் இரண்டு மாத தாடி அவர் முகத்துக்கு சற்றும் பொருத்தம் இல்லாமல் இருந்தது... அவரை தாடியில் இதுவரை நான் பார்த்ததே இல்லை.. தொம்சனை இரண்டு குழந்தைக்கு தகப்பன் என்றோ அல்லது ஐம்பது வயதை கடந்தவர் என்றோ நேரில் அவரை பார்ப்பவர்கள் யாரும் சொல்ல மாட்டார்கள்..

அப்படித்தான் அவரின் துணைவியாரும்.... அவரும் பார்க்க சின்ன பெண் போலவே இருப்பார்... இவ்வளவு ஏன் தொம்சன் தம்பதிகளுக்கு இருபத்தி இரண்டு வயதில் ஒரு மகன் இருக்கின்றான் என்று சொன்னால் யாரும் நம்பவே மாட்டார்கள்...

எங்கள் ஏரியாவில் இருக்கும் ஒரே கிராமத்து வெள்ளந்தி முகம் தொம்சன் அவர்களின் முகம்தான். விவசாயம் செய்வது ஒரு அவமரியாதையாக நினைத்து நன்கு விளைந்த நிலத்தை கோடு கிழித்து துண்டு துண்டாக ஆக்கி விற்பது போல விளைநிலத்தை அவரது விவசாய தோழர்கள் விற்ற போது தனது இரண்டு ஏக்கர் நிலத்தை இன்னும் விற்காமல் விவசாயம் செய்பவர் அந்த ஏரியாவில் தொம்சன் மட்டும்தான்.. அதனால்தான் எங்கள் ஏரியாவில் சுற்றிலும் கான்கிரிட் காடுகளுக்கு மத்தியில் நெல்லும் கத்திரியும் சில நேரங்களில் வெண்டையும் விளைத்து அந்த ஏரியாவை பசுமையாக ஆக்குகின்றது.....

எல்லோருக்கும் உதவும் குணம் கொண்டவர். நான் எனது பிளாட்டில் குடி போகும் போது எனக்கு பல வகையில் உடல் உழைப்பாக உதவி செய்தவர். அவரின் இரண்டு ஏக்கர் நிலத்தின் இன்றைய மதிப்பு 50 கோடிக்கு மேல். ஆனால் ஒரு போதும் அந்த பணக்கார புத்தியும் அலட்சியமும் அவரிடத்தில் நான் பார்த்ததே இல்லை.

அவரின் மனைவியும் அவரை போலவே... என் வீட்டில் எந்த விசேஷம் என்றாலும் எங்கள் வீட்டு பெண்மணி போல எடுத்துக்கட்டி வேலை செய்வார். நான் அசைவ உணவை விரும்பி சாப்பிடுவேன். ஆனால் என் மனைவி சைவப்பிராணி என்பதை தெரிந்து கொண்ட அவரின் மனைவி, எப்போது மீன் குழம்பு வைத்தாலும் ஐந்து துண்டு குழம்பு மீனோடு, இரண்டு வறுத்த மீனையும் அவரின் இரண்டாவது பையனிடம் கொடுத்து அனுப்புவார். எப்போது சிக்கன் வறுத்தாலும் கால்கிலோ அளவுக்கு என் ஒருவனுக்கு கொடுத்து அனுப்புவார்கள்..

ஊரில் உள்ள குழந்தைகள் எல்லாம் அவரின் மனைவி காட்டும் அன்பில் நெகிழ்ந்து அவர் வீட்டில் விளையாடிக்கொண்டு இருக்கும்.. அவரின் பக்கத்து வீட்டுக்கார பெண்மணி குழந்தை பெற்று மூன்று மாதத்துக்கு பிறகு அவரின் மனைவியிடம் ஒப்படைத்து விட்டு வேலைக்கு போகின்றார். அந்த அளவுக்கு அவர்களுக்கு குழந்தைகள் மேல் பிரியம்.

என் வீட்டு கொல்லைபுறத்தையும் அவர் வீட்டு கொல்லைபுறத்தையும் பிரிப்பது ஒரு சின்ன மதில் சுவர்தான். வீட்டில் கேஸ் அடுப்பு போன்ற இன்றைய நவீன சாதனங்கள் இருந்தாலும் இன்னமும் அவரின் மனைவி, அடுப்பில் சுள்ளி விறகு எரியவைத்துதான் சமையல் செய்வார். தாச்சியில் மல்லாட்டை வறுத்தலோ அல்லது வற்றல் வறுத்தாலும் எதுவாக இருந்தாலும் வாஞ்சையோடு வேண்டாம் என்றாலும் வற்புறுத்தி கொடுப்பார்கள். ஏங்க. வெளிய போய்க்கிட்டு இருக்கேன். எனக்கு இப்ப வேண்டாம் என்றாலும் ரெண்டை வாயில போட்டுக்கிட்டு போங்க என்பார்கள்...

காலையில் கொல்லைபுறத்தில் வாயில் பிரஷ்ஷோடு நிற்கும் போது நானும் அவரும் பல அரசியல் காமெடிகளை பேசி சிரித்து இருக்கின்றோம்..

ஆனால் நான் இரண்டு மாதமாக அவரையும் அவர் மனைவியையும் சந்திப்பதை தவிர்த்து வந்தேன் காரணம் அந்த இரண்டு மாத தாடி சோகம்தான்...

இரண்டு மாதத்துக்கு முன் அந்த திடும் என்ற செய்தி என்னை தாக்கியது... சென்னையில் கடற்கரையில் நண்பர்களோடு கடலில் குளிக்கப் போன அவரின் பெரிய மகன், கடல் சுழலில் சிக்கி இறந்து விட்டான் என்று.... உடல் இரண்டு நாட்களுக்கு பின்னரும் கரை ஒதுங்கவே இல்லை... மூன்றாவது நாள் முட்டுக்காடு அருகில் கரை ஒதுங்கியது. தம்பதிக்கு ஊரே ஆறுதல் சொல்லியது... நான் அவர் மகனின் இறுதி சடங்கு முழுவதும் உடன் இருந்து ஆறுதல் கூறினேன்...

நான் ஒரு வாரத்துக்கு மூட் அப்செட்.. அவர் பையனிடம் இந்த ஒரு வருடத்தில் இரண்டு ஒரு வார்த்தை மட்டுமே பேசி இருப்பேன்... இரண்டு வாரத்துக்கு கொல்லை புறத்துப்பக்கம் போகவேயில்லை. ஒரே அழுகையும் கேவலுமாக இருந்தது...

இருபத்தி இரண்டு வயதில் ஒரு மகனை இழப்பது சாதாரண விஷயமா? சொக்கலிங்கத்தின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. புத்தரசோகம் உலகத்தில் இருக்கும் சோகத்திலேயே பெரிய சோகம் அல்லவா?

யப்பா என் புள்ளை சிங்கம் போல இருப்பானே? இன்னைக்கு முழுதும் அவன் நடையையும், அவன் பைக் ஓட்டறதையும் பார்த்துக்கிட்டு இருக்கலாமே. அந்த அளவுக்கு அவன் ஸ்டைலா இருப்பானே என்று மார்பில் அடித்துக்கொண்டு திடீர் திடீர் என்று அழுதார்கள். அதனால் கொல்லைபுறத்துப்பக்கம் நான் செல்வதற்கு அதிகம் யோசித்தேன்... என் வீட்டில் டிவியை கூட சத்தமாக வைக்காமல் சப்தம் குறைத்து வைத்து பார்த்துக்கொண்டு இருந்தேன்..

ஒரு மாதத்துக்கு பிறகு அவர்கள் இயல்பு நிலைக்கு வந்தார்கள். தொம்சன் ஓரளவுக்கு இயல்புக்கு வந்தாலும்.. கொல்லைபுறத்தில் உட்கார்ந்தபடி விறகு அடுப்பில் சமையல் செய்யும் போதோ அல்லது கைவேலையாக புளி ஆய்ந்தாலோ, அல்லது தென்னை ஓலையில் தென்னந்துடப்பம் பிரித்தாலோ இறந்து போன மகனை பற்றி பேசாத நாளே இல்லை.. அதனால் இரண்டு வார்த்தை பேசி விட்டு அந்த இடத்தை நான் காலி செய்து விடுவேன்....

அன்று வேலை முடிந்து வீட்டின் கொல்லைபுறம் வந்தேன் தெம்சன் தம்பதியினர் மற்றும் இரண்டு மூன்று அவரது உறவினர்கள் உட்கார்ந்து இருந்தார்கள்... அவரிடம் நம்ம ஏரியாவில் ஈபியில் இருந்து வந்து மீட்டர் ரீடிங் எடுத்து சென்று விட்டார்களா? என்று கேட்டேன்.. இன்னும் இல்லை என்றார்... நான் உடனே போக எத்தனித்தேன்... ஒரு தட்டில் ஐந்து பெரிய துண்டு வஞ்சரம் மீன் வைத்து என்னை தின்னக்கொடுத்தார்கள்..

நானும் ரொம்ப நாள் கழித்து அசைவ உணவை பார்த்த மகிழ்ச்சியில் எதை பற்றியும் யோசிக்காமல் தட்டை வாங்கி இரண்டு சின்ன பீஸ்களை சாப்பிட்டு இருப்பேன்..

பெரியவனுக்கு சங்கரா மீனுன்னா உசுரு.. வறுத்து போடப் போட தின்னுக்கிட்டே இருப்பான்.. 15 துண்டுக்கு மேல அவன் ஒருத்தனே சாப்புடுவான் என்று சொல்ல...

நான் வஞ்சரம் மீனில் இருந்து கையை சட்டென எடுத்து விட்டேன்.. எனக்கு தர்மசங்கடமாக போய்விட்டது... ஆனாலும் மீன் ருசி எனக்கு சாப்பிடும் ஆவலை அதிகப்படுத்தினாலும் அந்த பையனின் முகமும் நினைவுக்கு வந்த காரணத்தால் எனக்கு சாப்பிடுவதில் தேக்கம் வந்து விட்டது... எனக்கு மீன் ருசித்து சாப்பிடும் ஆசையே போய்விட்டது.....

நேத்து டெத் சர்ட்டிபிகேட் வாங்க போனேன்.. இருபத்தி இரண்டு வயசுலயா இறப்பான்னு சர்ட்டிபிகேட் கொடுக்கற கவர்மென்ட் ஆபிசரு வருத்தப்படறான்.... இந்த காசு பணத்தை கொட்டிக்கொடுத்த ஆண்டவன் என்புள்ளையை இப்படி அல்பாயுசுல எடுத்துக்கிட்டானே என்று ஓங்கி குரல் கொடுத்து அழுதார் தொம்சன். சட்டென அழுகையை நிறுத்தினார். இயல்பாய் இறந்து போன பிள்ளையை பற்றி பேசினார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இன்னும் தட்டில் மூன்று வஞ்சரம் துண்டுகள்.. ம்... இன்னும் ஏன் தயக்கம் சீக்கிரம் தின்னு தொலைத்து இருக்க வேண்டியதுதானேன்னு என் மனசாட்சியோடு மல்லுக்கட்டிக்கொண்டு இருந்தன.. சரி அப்படியே வச்சிட்டு போயிடலாமா? என்னசெய்வதென்று எனக்கு தெரியவில்லை...

அவர் நிறுத்துவார் என்று எதிர்பார்த்தேன்... அவர் தொடர்ந்தார். எப்ப நிலத்துல களை எடுக்க போனாலும், படிச்சவன் என எந்த டீசன்டும் பார்க்காம லுங்கிய கட்டிக்கிட்டு என் புள்ளை என் கூட களை எடுக்க வருவானே! இனிமே யாரு எங்களுக்குன்னு இருக்காங்க....???

அவன் போனப்பவே எங்களுக்கு எல்லாம் விட்டுப் போச்சு... இப்ப கூட உயிர் வாழணுமேன்னுதான் நான் வாழறேன், சாப்பிடறேன் என்றார்.... அவர் சொன்ன கடைசி வாக்கியத்தை நான் பலமாய் ஆமோதித்தேன்...

அவரிடம் மீன் வைத்துக் கொடுத்த தட்டை மதில் சுவரை தாண்டி நீட்டினேன்.. அதில் தொம்சன் வைத்துக் கொடுத்த ஐந்து வஞ்சரம் மீன் துண்டின் சற்றே தடிமனான முட்கள் மட்டும் இருந்தன.

---

# சாதாரணமானவனின் மனது

# பந்தும் உருண்டைதான்

சஞ்சயன் செல்வமாணிக்கம்

**எனது** யாத்திரைப் பயணத்தில் இன்று ஓய்வு நாள். கால்விரல்கள் இரண்டு நீர் கட்டி உபாதைதருவதால் நாளை மறுநாள் காலை வரை ஓய்வு அவசியமாகிறது. எனவே Burgos என்னும் நகரத்தில் என் வாழ்க்கை ஓடுகிறது.

Sports சாமான்கள் விற்கும் ஒரு கடையைத் தேடியலைந்தேன். கண்ணில்படவில்லை ஒரு கடையும்.

அந்த நேரத்தில் என் நிறம் கொண்ட, என்னைப்போன்ற தலை உடைய, என்னைப்போன்ற அழகான ஒரு ஆபிரிக்க நாட்டவர் சைக்கிலில் வந்தார். அவரைப் பார்த்துச் சிரித்தேன்.

அவரும் சிரித்தபடியே என்னருகில் வந்து ஒரு காலை ஊன்றி மறுகாலை சைக்கிலில் வைத்தபடியே ஸ்பானிய மொழியில் பேசினார்.

நான் பேய் முழி முழிப்பதை பார்த்த அவருக்கு புரிந்திருக்கவேண்டும். Fransi என்று கேட்டார். இல்லை என்று தலையை அங்கும் இங்கும் ஆட்டினேன். Arabi என்றார் இதற்கு முன்னிலும் மிக வேகமாய் இல்லை என்று தலையாட்டினேன்.

அவரை விட்டால் எனக்கு தெரியாத மொழியை எல்லாம் கேட்பார் என்பதால் English என்றேன். அவர் என்னை விட அதிகமாக இல்லை என்று தலையை அங்கும் இங்கும் ஆட்டினார்.

அவரிடம் Sports கடை எங்கே இருக்கிறது என்று கேட்க வேண்டும். Sports shop என்றேன். அவருக்குப் புரியவில்லை. பந்து போன்று கையால் சைகை செய்து காட்டினேன். நோ நோ English என்றார். டேய்! இது கைப்பாசை என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டேன். மீண்டும் பெரிய பந்து ஒன்றை சைகையால் காட்டி காலால் அடித்தும் காட்டினேன். அத்துடன்: எனக்கு தெரிந்த 4 - 5 Franch சொற்களில் boutique என்றால் கடை என்பதும் ஒன்று.

Spanish மொழியில் பல சொற்களை "ஓ" போட்டு பேசுகிறார்கள் என்பதை அவதானித்திருக்கிறேன். எனவே நானும் Sport"O" boutique"O" என்று English, Franch, Spanish கலந்து ஒரு புதிய மொழியில் சொன்னேன். சீ சீ சீ என்று தலையை ஆட்டினார்.

மனிதர் சைக்கலில் இருந்த இறங்கி நடக்கத் தொடங்கினார். என்னை வா என்று அழைத்தார்.

ஆஹா. எனது மொழி அவருக்கு புரிந்துவிட்டது என்ற பெருமிதத்துடன் எனது English, Franch, Spanish கலந்த மொழியில் நானும், Franch, Spanish. Arabi மொழியில் அவரும் பேசிக் கொண்டே சென்றோம்.

இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை என்று கூறமுடியாது. அதே வேளை எல்லாம் விளங்கியது என்றும் கூற முடியாது.

மனிதர் நடக்கிறார் நடக்கிறார். Burgos நகரத்தின் எல்லைக்கே என்னை அழைத்துப் போனது போல இருந்தது அவருடனான பயணம்.

ஏறத்தாள 20 நிமிடங்களின் பின் திடீர் என்று ஒரு நாற்சந்தியில் நின்றபடியே hay hay என்றார். யாரையோ அழைக்கிறார் என்று நினைத்தேன், நான்.

அவர் எனது தோளில் பிடித்தபடியே hay hay என்று கையைக் காட்டினார். (பின்பு தான் google traslater மூலம் hay என்றால் "அங்கே" என்று அறிந்து கொண்டேன்)

அவர் காட்டிய திசையில் கட்டடங்களும், மனிதர்களும், வாகன நெருக்கடியுமே தெரிந்தது. எனவே புருவத்தை சுருக்கினேன்.

இரண்டு தடவைகள் முயற்சித்தார். எங்கள் மொழியில் அவர் நினைத்த வார்த்தை இருக்கவில்லை.

எனவே 'ஓ' என்று அழைத்துப் போய் ஒரு கட்டடத்தின் முன்னே நிறுத்தி, உள்ளே செல் என்றார். நானும் Thank you, Merci, gracias, ரொம்ப நன்றிங்கண்ணா என்று கூறினேன். கையை குலுக்கோ குலுக்கு என்று குலுக்கி, இழுத்தணைத்து முதுகில் அறைந்து ஆபிரிக்க முறைப்படி விடைபெற்றார் நண்பர்.

என்ன அன்பு, என்ன பண்பு முகமறியா எனக்கு இவ்வளவு உதவி செய்த மனிதரைப் பற்றி மனது பெருமிதம் கொண்டது.

நான் எப்பொழும் சிக்கல்களில் இருந்து மீள்வதற்கு ஏதோ ஒரு நல்ல சக்தி என்னை எப்போதும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

அப்போது தான் நான் அந்தக் கட்டடத்தைப் நிமிர்ந்து பார்த்து Sports கடை எங்கே இருக்கிறது என்று தேடினேன்.

இப்போது தான் புரிந்தது நண்பர் என்னை அழைத்து வந்திருந்தது உள்ளரங்கத்தில் காற்பந்து விளையாடும் இடம் (indoor sports stadium) என்று.



இன்றைய நாளும் நல்லதே ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## ஸ்பிரிங் றோல்ஸ்

### தேவையான பொருட்கள்

கோதுமை மா - 1 கப், பட்டன் காளான் - 12, பசலைக்கீரை - 1 கட்டு, வேகவைத்த சோளமுத்துக்கள் - அரை கப், சிஸ் துருவல் - கால் கப், பால் - 1 கப், வெண்ணெய் - 1 மே.கரண்டி, சோள மா - ஒன்றரை கப், உப்பு - தேவைக்கு, எண்ணெய் - தேவைக்கு.



### செய்முறை

கோதுமை மாவுடன் சிறிது உப்பு சேர்த்து, சற்று இறுக்கமாகப் பிசையுங்கள். காளானையும் பசலையையும் பொடியாக நறுக்கிக் கொள்ளுங்கள். பின்னர் வெண்ணெயை உருக்கி, பசலைக்கீரை, காளான் இரண்டையும் சேர்த்து வதக்குங்கள். நன்கு வதங்கியதும், வேகவைத்த சோளம், மிளகுத்தூள், சிஸ் சேருங்கள். அத்துடன், பாலில் சோள மாவைக் கரைத்துச் சேர்த்து நன்கு கிளறுங்கள். இறக்கி ஆறவிடுங்கள். பின் பிசைந்த மாவிலிருந்து சிறிய உருண்டை எடுத்து மெல்லிய சப்பாத்தியாக தட்டுங்கள். காளான் கலவையை ஒரு கரண்டி எடுத்து, ஒரு ஓரத்தில் நீளவாக்கில் வைத்து ஒரு முறை சுருட்டுங்கள். பின், பக்கவாட்டில் இருபுறமும் மடித்து, மீண்டும் சுருட்டி தண்ணீர் தொட்டு ஓரத்தை ஒட்டுங்கள். எண்ணெயைக் காய வைத்து, இரண்டிரண்டாக போட்டு நன்கு பொரித்தெடுங்கள்.

## காதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்



ஒலியை கேட்கும் திறன் உள்ள உறுப்பான காது சரியான முறையில் செயல்படுதல் மனிதனுக்கு அவசியம். நமது தாடை அசைவின் போது தானாகவே அழுக்குகளை வெளியேற்றும் திறன் காதுகளுக்கு உண்டு. கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் காதில் விட்டு குடைந்து அழுக்குகளை நீக்க முயற்சி செய்யக்கூடாது.



### காது மடல் பிரச்சனை

அரிப்பு, கடி புண்ணாதல் போன்றவை ஓட்டையைச் சுற்றியுள்ள தோலில் ஏற்படுவதுண்டு. தோட்டில் கலந்துள்ள உலோகங்களால் சருமத்தில் அழற்சி ஏற்படும். தங்கம் அல்லாத உலோகங்களிலான அலங்காரத் தோடுகளாலேயே பெரும்பாலும் இது ஏற்படுகிறது. சிலர் காது பகுதிக்கு சோப் போட்டுவிட்டு நன்கு அலசிக் கழுவாது விடுவதால் அழற்சி ஏற்படுவதும் உண்டு.

### செவிப்பறையில் ஓட்டை விழும் அபாயம்

1. காதில் எண்ணெய் விடுவதும் தவறான செயல். ஆதலால் தேவைப்படும் போது காது, மூக்கு, தொண்டை நிபுணர்களிடம் சென்று காதுகளைச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

2. காது வலி, காது அடைப்பு, அல்லது காதில் இருந்து திரவம் வடிதல் போன்ற பிரச்சனைகள் இருக்கும் போது தலைக்கு குளிப்பது, நீர்நிலைகளில் நீராடுதல் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது.

தொடரும்.. ..










அழகு குறிப்பு

## ண்களை எவ்வாறு பாதுகாப்பது!!



கண்களின் அழகை பராமரிக்க தினமும் எட்டு மணிநேரம் தூக்கம் மட்டுமல்லாமல் கல்சியம், விட்டமின்கள் நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும். அதாவது பால், பால் உணவுகள், கீரை வகைகள், முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப்பழங்கள் பச்சை காய்கறிகளை உட்கொள்ள வேண்டும்.

கண்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் கடிகாரம் சுற்றும் முறையிலும், எதிர்முறையிலும் மூன்று முறை சுற்ற வேண்டும். மேலும் அருகில் உள்ள பொருட்களை பார்த்துவிட்டு தூரத்தில் உள்ள பொருட்களை பார்க்க வேண்டும்.

கட்டைவிரலை நடுவில் வைத்துக் கொண்டு அதனை இடமாகவும் வலமாகவும் விரலை மட்டும் நகர்த்தி தலையை திருப்பாமல் வெறும் பார்வையை மட்டும் திருப்பி பார்க்க வேண்டும். தினமும் இந்த பயிற்சியை தொடர்ந்து செய்தால் கண்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

நீண்ட நேரம் கணனி அல்லது தொலைக்காட்சி முன் அமர்ந்து வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி ஏதேனும் பச்சை வெளியைப் பார்க்கலாம் அல்லது கண்களுக்கு குளிர்ச்சி தரும் நீல நிறங்களை பார்க்கலாம்.

ஆரஞ்சு பழத்தை சாறாக பிழிந்து குளிர்சாதனப்பெட்டியில் வைத்து கட்டியான பின்னர் ஒரு துணியில் கட்டிக்கொண்டு கண்களுக்கு மேல் ஒத்தி எடுத்தால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.

## அழகாக இருக்க சூப்பர் டிப்ஸ்

எண்ணெய் வடிந்த சருமம் கொண்டவர்கள் :

ஒரு டிஷ்யூ பேப்பரை வைத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் சுற்றி அழுத்தித் தேய்க்க வேண்டும். ஆலிவ் எண்ணெயைக் குழைத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மெதுவாக மசாஜ் செய்து நன்றாக ஊறியதும் கழுவ வேண்டும்.

அப்பிள் பழத்தை நன்கு குழைத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மசாஜ் செய்தபின் கழுவ வேண்டும். இதே போல் வெந்தயத்தை நன்கு அரைத்தும் மசாஜ் செய்யலாம்.

வாழைப்பழத்தை மசித்து பால், தேனுடன் சேர்த்து தினமும் முகத்தில் தடவி வந்தால் கண்டிப்பாக பொலிவு பெறும்.

உங்கள் சருமம் கடினமாக இருந்தால் கடலை மாவுடன் சிறிது மஞ்சள் தூள், பால் ஒரு தேக்கரண்டி மற்றும் எலுமிச்சை சாறு ஆகியவற்றை கலந்து முகத்தில் தடவவும்.பின்னர் மிதமாக சூட்டில் உள்ள தண்ணீரை கொண்டு முகத்தை கழுவவேண்டும்.

வாரத்திற்கு மூன்று முறை தலைமுடியை அலசினால் போதும். அதிலும், சாதாரண நீரில் கழுவுதல் போதுமானது. எண்ணெய் தன்மையுள்ள பொடுகுகளை நீக்க, ஆலிவ் எண்ணெயில் தலைமுடியை, 15 நிமிடங்களுக்கு மசாஜ் செய்து, அதற்கு பின், சூடான நீரில் நனைத்த டவலை தலையில் சுற்றி, சிறிது நேரத்திற்குப் பின் முடியை அலச வேண்டும்.






### இனவேறுபாடு காரணமாக சிறுவர் மீது சிறுநீர் கழிப்பு

கடந்த ஆகஸ்ட் மாதம் ரயிலில் குடிபோதையில் ஏறிய இருவர் அவர்களிடம் இன வேறுபாடுடன் நடந்து கொண்டதாக கூறப்படுகிறது. ஹிட்லரை புகழ்ந்து பேசிய அவர்கள் நாஜிக் படையினரை போல் வணக்கமும் தெரிவித்துள்ளதுடன் தாங்கள் தான் உயர்ந்த இனம் என்றும் கத்தியுள்ளனர். பின்னர் போதையில் இருந்த நபர்களில் ஒருவர் குழந்தைகளின் மீது சிறுநீர் கழித்ததாக கூறப்படுகிறது.

இப்படியும் நடக்கலாம்

## தீவிரவாதிகளிடமிருந்து தப்பிய இலங்கைத் தமிழ்ப் பெண்

கம்சாஜினி குணரத்னம்(27) என்பவர் இலங்கையில் பிறந்து 3 வயதாக இருந்தபோது நோர்வே நாட்டில் பெற்றோர்களுடன் குடியேறி வந்துள்ளார். நாட்டின் பல்வேறு சமூக மற்றும் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்தமையால், நோர்வேயில் உள்ள உடோயா என்ற தீவுப்பகுதிக்கு கடந்த 2011ம் ஆண்டு பயணம் மேற்கொண்டபோது தீவிரவாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே மூண்ட சண்டையில் சிக்கிக் கொண்ட கம்சாஜினி தீவுக்கடலில் குதித்து நீந்தியவாறு கடற்கரையை அடைந்த உயிர் தப்பினார்.

கூட்டணி கட்சிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து, ஒஸ்லோ நகரின் துணை மேயராக கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்பட்ட அவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், 'தீவிரவாதிகளால் சுட்டு இறப்பதை விட தண்ணீரில் மூழ்கி சாவது மேல் என்ற துணிச்சல் தான் தன்னை உயிர்பிழைக்க வைத்தாக தெரிவித்துள்ளார்.



- மியான்மரின் இளம் எழுத்தாளரும் கவிஞருமான ஆயரபெ ளுயரபெமாய என்பவர் கடந்த 8-ம் திகதி தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட உருவம் என தலைப்பிடப்பட்டுள்ள கவிதையின் சில வரிகள் ஜனாதிபதியை களங்கப்படுத்துவதாக புகார் எழுந்ததை அடுத்து காவல்துறையினர் அவரை தேடி வருகின்றனர்.
- மனைவியின் கழுத்தை அறுத்து கொடூரமாக கொலை செய்த கணவன், உடலை ஆற்றில் வீசிவிட்டு தப்ப முயன்ற சம்பவம் ஒன்று தெற்கு ரஷ்யாவில் இடம்பெற்றுள்ளது. குழந்தையை விட்டுத்தர கேட்டு நிகழ்ந்த வாக்குவாதமே கொலை செய்யும் அளவுக்கு நீண்டுள்ளது.
- இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் நாடுகள் குழம்பியுள்ள நிலையில் சிறுமி ஒருவர் கையில் கத்தி வைத்துக்கொண்டு யூதர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அவர்கள் நம்முடைய நிலத்தை அபகரித்துவிட்டார்கள், அவர்களை கொல்ல வேண்டும் என கூறும் வீடியோ பரவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




***குழப்பங்கள் நிறைந்த பிரதேசம்***

குழப்பங்களை சாதாரணமாக எடைபோட முடியுமா?

உலகில் நிகழும் குழப்பங்களை சாதாரணமாக எடை போட முடியாது. அவை சிலபோது படுபயங்கரமானதாகவும், சிலபோது சாதாரணமானவையாகவும் இருப்பது குழப்பங்களின் இயல்பாகும்.

தஜ்ஜாலின் குழப்பம், மண்ணறையில் வானவர்களால் ஏற்படும் கேள்வி தொடர்பான குழப்பங்கள், ஈராக், சிரியா போன்ற நாடுகள் பற்றி முன்னறிவிப்புச் செய்யப்பட்ட குழப்பங்கள் மிகப் பயங்கரமானவையாகவே இருக்கப்போகின்றது.

அதே வேளை, குடும்பங்கள், அண்டை அயலவர், உறவினர்களோடு ஏற்படும் குழப்பங்களை நோக்கினால் அவை சாதாணமானவைகளாகும். இவை அனைத்திற்குமான தீர்வு பற்றி அல்லாஹ்வின் தூதரால் வழிகாட்டப்பட்டுள்ளது. அவற்றில் முன் சென்ற சமூகத்தின் வழிகாட்டலும், நடைமுறையும் ஒன்றாகும். அது பற்றி சுருக்கமாக பின்வருமாறு நோக்கலாம்.

உங்களது இந்த சமூத்தின் ஆரோக்கியம் (ஈடேற்றம்) அதன் ஆரம் சமூகத்தில் ஆக்கப்பட்டிருந்தது. அதன் இறுதிக்கட்டத்தில் பல சோதனைகள், மற்றும் நீங்கள் வெறுக்கின்ற விவகாரங்கள் (குழப்பங்கள்) நடந்தே தீரும். ஒரு குழப்பமான நிலை வரும். ஒரு குழப்பம் முந்திய மற்ற குழப்பத்தை எளிதாக்கிக் காட்டும். ஒரு குழப்பம் வரும். அப்போது இறை விசுவாசியானவன் இதுவே எனது அழிவு என முடிவு செய்வான். பின்னர் அது அகன்று விடும். பிறிதொரு குழப்பம் வரும். அப்போது இறை விசுவாசியானவன் இதுவே எனது அழிவு. இதுவேதான் என முடிவு செய்வான். யார் நரகில் இருந்து காப்பற்றப்பட்டு, சுவனத்தில் நுழைவிக்கப்பட விரும்புகின்றாரோ அவர் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பியவராக இருக்கும் நிலை அவரது மரணம் அவரை வந்தடையட்டும். மனிதர்களில் யாரிடம் வர அவர் விரும்புகின்றாரோ அவரிடமே அவர் வரவும். (அதாவது குழப்பவாதிகளிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

குழப்பங்கள் நிகழ்வது பற்றியும், அவற்றின் தன்மைகள் பற்றியும், அது பற்றிய வழிகாட்டல்களும் இதில் தெளிவாக இடம் பெற்றுள்ளன.

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். நிஷ்வான் –**

# சிறிய இறைவாக்கினர்கள் வரலாறு




இறைவனோடு உடன்படிக்கைசெய்து கொண்ட மக்கள் என்றும், அதனால் தங்களைக் கடவுள் தண்டிக்கமாட்டார் என்ற எண்ணத்தோடு வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இங்கே ஆமோஸ் கடவுளின் எண்ணத்தை விளக்குகிறார். சூ8220 உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நான் சிறப்பாக அறிந்து கொண்டேன் ஆதலால் உங்கள் தீச்செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத் தண்டிப்பேன் (3:2). அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக இருப்பதால் தான், இறைவன் அவர்களை அவர்கள் செய்கிற அக்கிரமங்கள் அனைத்திற்காகவும் தண்டிக்கப் போகிறார்.

4:4-5 மனம் மாறாமல் பலிகளை மட்டும் செலுத்துவதால் ஒரு பயனும் இல்லை, என்று அடித்துக் கூறுகிறார். பலிகள் பாவங்களை அதிகமாக்குகின்றன என்று ஆமோஸ் கூறுகிறார். பெத்தேல், கில்கால் (Bethel and Gilgal) என்ற இரு இடங்களிலும் தொடக்கத்திலிருந்தே கோவில்கள் இருந்து வந்தன. பெத்தேல் என்ற இடத்தில் தான் யாக்கோபு கனவு கண்டார். இஸ்ரயேல் மக்கள் யோர்தானைக் கடந்து, முதலில் அவர்கள் அடைந்த இடம்கில்கால் (Gilgal). இங்கு தான் அவர்கள் முதல் கடத்தல் (பாஸ்கா) விழாவைக் கொண்டாடினார்கள்.

எப்போதுமே மக்கள் இந்த இரண்டு இடங்களுக்கும் வந்து கடவுளுக்கு பலிகளைச செலுத்துவது வழக்கம். அது போன்று தான் ஆமோஸ் காலத்திலும் மக்கள் பலி செலுத்தினர், பலிகளை விட, உள்ளத்தை இறைவன் விரும்புகிறபடியால், அவர்கள் உள்ளம் மாறாமல், வெறும் பலிகளை மட்டும் செலுத்த பெத்தேல், கில்காலுக்கு வருவதால் அவர்கள் பாவத்தையே கட்டிக் கொள்கிறார்கள் என்று கூறுகிறார் ஆமோஸ்.

பொது இடங்களில், அதாவது நீதி வழங்கப்படும் இடங்களில், நீதிவழங்கப்பட வில்லை. நீதிக்காகக் குரல் கொடுப் பவனை, ஏழைகளுக்காகப் பரிந்து பேசுபவனைத் துன்புறுத்துகிறார்கள். ஏழைகளிடமிருந்து பெற்றபணத்தில் பெரிய மாளிகைகள் கட்டி, தங்கக் கட்டில்களில் வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்.

தொடரும் .. ..

www.bible.me

# விவாகரத்து அவசியமானது தானா??



கணவன் மனைவி இடையே ஏற்படும் எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வு விவாகரத்துதான் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆண், பெண் இருவரும் சரிசமம் என்று சொல்லிக் கொண்டு அசுர வேக வளர்ச்சியை காட்டும் இன்றைய தலைமுறையினரிடம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எந்த ஒரு சிக்கலுக்கும் சரியான தீர்வு காணும் பொறுமை இல்லை.

விவாகரத்து தேவைதானா?

திருமணத்துக்கு முன்பு - திருமணத்துக்கு பின்பு என்று ஒருவருடைய வாழ்க்கையை இரண்டாக பிரித்துப் பார்த்த காலம் போய், இப்போது விவாகரத்துக்கு முன்பு - பின்பு என்று பிரித்துப் பார்க்கிறார்கள்.

ஆண்களும் விவாகரத்துக்கு பிறகு அதிகமான மனநெருக்கடிக்கு உள்ளாகி விடுகிறார்கள். இதனால் அவர்களுடைய தொழில் பாதிப்படைகிறது.

விவாகரத்தில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான்! என்னதான் மனதளவில் அவள் தைரியமான பெண்ணாக இருந்தாலும், அவளுடைய சமூக அந்தஸ்து குறைந்து விடும்.

அதற்கு தக்கபடி அவள் தன் மனதை பக்குவப்படுத்திக்-கொள்ளாவிட்டால், மனதளவில் உடைந்து போகநேரிடும்.

அப்போது தனக்கு முன்னால் இருக்கும் உலகம் வேறு, தனக்கு பின்னால் இயங்கும் உலகம் வேறு என்பதை உணர்கிறபோது அவர்களுக்குள் இன்னொரு கேள்வி எழும்.

அது, நாம் மற்றவர்களுக்கு பாரமாக இருக்கிறோமோ? என்ற கேள்வி! அப்போது விவாகரத்து என்பது தான் எடுத்த தவறான முடிவு என்ற குற்ற உணர்வு தோன்றும்.

மாறாக அவர்களிடமே இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். விவாகரத்து செய்வது ஒன்றும் தவறில்லை, தினம் தினம் சண்டை சச்சரவுகளுக்கிடையே வாழ்வதைவிட, பிரிந்துவிடுவது மேல் என்று நினைக்கிறார்கள்.

இந்த பிரச்சனைக்கெல்லாம், இவைதான் தீர்வு என்று கிடையாது. ஆனால், பொறுமை, நிதானம் சகிப்புத்தன்மை என்பவை இருந்தால், வாழ்வில் விவாகரத்து என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள்.



***ஒரு இறப்பு வீட்டில் புகைப்படக் காரர் ஒருவரை பத்து பேர் அடித்துக் கொண்டிருந்தனர்.***

அதில் நின்றிருந்த ஒருவர் "ஏங்க அவரைப் போட்டு இப்படி அடிக்கிறீங்க?" என்றார்.

அதற்கு அடித்துக் கொண்டிருந்த ஒருவர் இறந்தவரை போட்டோ எடு எனக் கூறியதற்கு ஸ்மைல் ப்ளீஸ் சொல்றான்!!

*காக்கா கத்தினா சொந்தக்காரங்க வீட்டுக்கு வருவாங்களாப்பா?*

ஆமா

*அப்போ எப்ப திரும்பி போவாங்க*

உங்க அம்மா கத்தினா




## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : மனதில் தெளிவு பிறக்கும். பணிகள் சிறப்பாக அமையும். பணவரவால் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர்.

**ரிஷபம்** : செயல்களில் நிதானம் வேண்டும். உறவினரால் உதவிகிட்டும். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகி இருக்கவும். குளறுபடிவராது செயல்படுவது நல்லது.

**மிதுனம்** : உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவி வழி உறவினர் மதிப்பு, மரியாதை தருவர். வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும்.

**கடகம்** : நற்செயலால் பெருமை கிடைக்கும். பணவரவு திருப்திகரமாகும். மங்கள நிகழ்வு உண்டாகும். புத்திரர்களின் கேள்விகளுக்கு, அனுபவங்களை பதிலாகச் சொல்வீர்கள்.

**சிம்மம்**: பொது விவகாரங்களில் தலையிட வேண்டாம். உடல்நிலையில் கவனம் தேவை. வியாபாரத்தில் சுமாரான பணவரவு இருக்கும். பணிநிறைவேற்ற கால தாமதமாகும்.

**கன்னி** : மனதில் தைரியம் கூடும். வாழ்வில் முன்னேற வழி பிறக்கும். உடல்நலனில் பாதிப்பு வரலாம். வியாபாரத்தில் வருகிற இடையூறை தாமதமின்றி சரி செய்யவும்.

**துலாம்** : வீட்டில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். செய்த நற்செயலுக்குரிய பெருமை கிடைக்கும். பூர்வசொத்தில் பண வரவு அதிகரிக்கும். எதிரியின் மனதில் மாற்றம் தரும்.

**விருச்சிகம்** : மனதில் மகிழ்ச்சிகர எண்ணம் வளரும். உடன் பிறந்தவர்களின் கருத்தை விமர்ச்சிக்க வேண்டாம். எதிர்ப்பாளர்கள் பலமிழந்து போவர்.

**தனுசு** : சொல்லும், செயலும் நேர் வழியில் இருக்கும். அக்கம் பக்கத்தவர் அதிக அன்பு பாராட்டுவர். அரசாங்க நன்மை கிடைக்கும். வெகுநாள் பிரச்னை தீரும்.

**மகரம்** : குடும்பத்தில் ஒற்றுமை கூடும். உடல்நிலையைக் காக்கவும் மனைவி வழி உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவர். சேமிப்பு அதிகரிக்கும்.

**கும்பம்** : குடும்பத்திற்கான பணத்தேவை அதிகரிக்கும். குடும்பத்தில் சமரசபேச்சு நன்மை தரும். வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் இலக்கை அடையும்.

**மீனம்** : எவருக்கும் அதிக பட்ச வாக்குறுதி தரவேண்டாம். எதிர் மனப்பாங்கு உள்ளவர்கள் கூட மறைமுக உதவிபெற முயற்சிப்பர். பெண்கள் செலவுக்கு திண்டாட நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கானவழிகாட்டி

01. அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து
1. வீட்டுக் ............................................ காகம் இருந்தது (கூரையில், கூறையில்)
2. நாம் ஏழைகளுக்கு ........................................வேண்டும் (இறங்குதல், இரங்குதல்)


02. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரினதும் கருத்தை எழுதுக
1. கண்ணுங் கருத்துமாக - ..................................
2. கை கொடுத்தல் - ..................................
3. உச்சி குளிர்தல் - ..................................

03. இடைவெளிக்குப் பொருத்தமான மரபுச்சொற்களை எழுதுக
1. அணிலுக்குக் குஞ்சு போல தவளைக்கு :
..................................
2. கோழி கொக்கரிக்கும் என்பது போல புறா :
..................................

04. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக
1. Bring your book: ..................................
2. Please sit down: ..................................
3. May I go home: ..................................


05. பொதுச் சொத்துக்களை பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு கையளிப்போம் கட்டுரை வரைக.
1. ..................................
2. ..................................
3. ..................................
4. ..................................

06. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?




..................................

07. உருவின் சுற்றளவை காண்க? ..............................




08. 250ml தேங்காய் எண்ணெயின் விலை ரூபா 15.00 எனின் ரூபா 75.00 இற்கு வாங்கக்கூடிய தேங்காயெண்ணெயின் அளவு யாது?
..................................

09.  இவ்வுருவை மடித்து ஒட்டும் போது தோன்றும் திண்மம் யாது? ..................

10. சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லை தெரிவு செய்க
I. கலைஞ்சன் ii. கலைசன் iii. கலஞன் iv. கலைஞன்
I. இலச்சினை ii. லச்சிலை iii. இலட்சினை iv. இலட்ச்சினை

11. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள் வாக்கியம் எழுதுக
1. குமிழ்கள் / இரு/ வீதியின் / கொண்டிருந்தன / மின் / ஒளிர்ந்து / அந்தபக்கங்களிலும் / நிற
..................................
..................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






## சொர்க்கமும் நரகமும்

ஒரு ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன் மிகப் பெரிய பணக்காரன். ஆனால் யாருக்கும் உதவ மாட்டான். அவனுக்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது.

ஒரு நாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றினார். அவனை சொர்க்கத்துக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறினார். அவனும் அவருடன் சென்றான். முதலில் அவனை நரகத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கு உணவு நேரத்தில் பெரிய பெரிய அண்டாக்களில் சாதம், குழம்புமற்றும் சுவைமிக்க பதார்த்தங்களும் இருந்தன. அவரவர்களுக்கு தட்டுகள் கொடுக்கப்பட்டு சுவைமிக்க உணவு பரிமாறப்பட்டது. எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது ஆனால்...

அந்தோ பரிதாபம்! அனைவராலும் கையை நீட்டி உணவுப் பொருளை எடுக்க முடிந்ததே தவிர, கையை மடக்கி வாய்க்கு அந்த உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை.

எனவே அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்கு பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு அவற்றிலுள்ள உணவை வீணாக்கினர். பின்னர் தாங்க முடியாத பசியினால் உட்கார்ந்து அழுதனர். பின்னர் அந்த பெரியவர் அந்தக் கருமியை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார்.

அங்கும் அதேபோல் அண்டாக்கள் நிறைய அருமையான சாப்பாடு வைக்கப்பட்டிருந்தது. அங்கு இருந்தவர்களுக்கும் கையை நீட்ட முடிந்தது. ஆனால் தங்கள் வாய்க்கருகே கொண்டு செல்ல கையை மடக்க முடியவில்லை. ஆனால் அவர்களில் ஒருவர் தனது நீட்டிய கையால் இனிப்பு வகைகளை எடுத்து எதிரே இருந்தவர் வாயருகில் நீட்டினார். மடக்கத்தாதே முடியாது? கையை நீட்டி எதிரே இருப்பவரின் வாயில் ஊட்டமுடியுமல்லவா?

இப்படியே அனைவரும் ஊட்டி மகிந்தனர். அனைவரினதும் வயிறு நிரம்பியது.

கருமி கனவிலிருந்து மீண்டான். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் புரிந்து கொண்டான். தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம் என்பதையும் உணர்ந்தான்.

அன்றிலிருந்து அவன் அனைவருக்கும் உதவிகள் பல புரிந்து நல்வாழ்வு வாழ்ந்தான்.



அனைவருக்கும் உதவி புரிந்து வாழ வேண்டும்

**சிந்திக்க . . .**
தனியாக இருக்கும் போது சிந்தனையிலும்:
கூட்டத்தில் இருக்கும் போது வார்த்தையிலும்
கவனமாக இருக்க வேண்டும்

## விடுகதைகளும் விடைகளும்

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?
2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?
3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
4. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.
6. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?

**விடைகள்**
1. தீக்குச்சி
2. தபால் தலை
3. கடல் அலை
4. சாமரம்
5. வெங்காயம்
6. தொலைபேசி

கே. பிரணவி,
தரம் -05
திருகோணமலை

ஆர்.ஏ.சஹானா
தரம் - 02



பிரியசகி.கே
கோபாலபுரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு குறித்த வேலையை செய்து முடிப்பதற்கு ஒரு மனிதன் 6 நாட்கள் எடுக்கின்றான். அத்தகைய மூன்று மனிதர்கள் இரண்டு நாட்கள் வேலையை செய்தால் அவ்வேலையில் என்ன பின்னத்தைச் செய்து முடிக்கலாம்?


02. ஒரு கட்டடத்தில் 10m உயரத்திலுள்ள ஓர் ஜன்னலில் அக்கட்டத்திலிருந்து 15m தூரத்தில் உள்ள 20m உயரம் உள்ள வேறொரு கட்டடத்தின் உச்சி 40 ஏற்றக்கோணத்தில் காணப்படுகின்றது. இத்தகவல்களைக் காட்டுக பரும்படி வரிப்படத்தை வரைக.

03. $y=x^2+4x+8$ என்னும் சார்பின் சமன்பாட்டை மாற்றியமைத்து வளையியின் சமச்சீர் அச்சின் சமன்பாடு, திரும்பல் புள்ளியின் ஆள்கூறு ஆகியவற்றைக் காண்க.

04. பொருள் ஒன்றை விற்கும் போது, அதன் குறித்த விலையில் 8% கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. அப் பொருளின் குறித்த விலை ரூபா 2500 எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

**பகுதி 02**

01. உருவில் AB, BC, ED ஆகியவற்றின் மூலம் சமதளத்தரையில் உள்ள ஒரு நிலைக்குத்துக் கம்பமும் அதில் பொருந்திய இரு ஆதாரங்களும் முறையே காட்டப்படுகின்றன. மேலும் AE = 3.7m, AD = 5.0m, BC = 10.0m, BCA = EDA ஆகும்




(1) EDA யின் பருமனையும் கம்பம் யடியின் உயரத்தையும் காண்க.

(2) DB யின் நீளம் BC யின்நீளத்திலும் பார்க்கக் குறைந்ததா, கூடியதா, என்பதைக் காரணங்களுடன் தந்து எடுத்துரைக்க.

## பாடம் : வரலாறு

01. அனாகரிக தர்மபால, ஆறுமுக நாவலர், சித்திலெப்பை ஆகியோரின் பணிகளில் பொது இயல்பு பின்வருவனவற்றில் யாது?
(1) தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஒருமிக்கப்பணியாற்றுதல்
(2) மதுக் கடைகளை தடைசெய்வதற்கான இயக்கத்தை விரிவுபடுத்தச் செயற்படுதல்
(3) பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிக்கச் செயற்படுதல்
(4) தமது சமயம், கலாச்சாரம் என்பன தொடர்பாக மறுமலர்ச்சியை ஏற்படுத்தச் செயற்படுதல்

02. பிரித்தானியர் இலங்கையில் கவனஞ் செலுத்துவதற்குப் பின்வரும் எவ்விடயம் காரணமாக இருந்தது?
(1) தோட்டப் பயிர்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த காணிகளைப் பெறுவதன் தேவை
(2) உள்நாட்டு மக்களைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுவதன் அபிலாசை
(3) இந்து சமுத்திரத்தில் கடல் நடவடிக்கைகளை வழிப்படுத்துவதற்குத் திருகோணமலைத் துறைமுகத்தை விளங்கிக் கொள்ளல்
(4) இலங்கையின் கறுவா வர்த்தகம் தொடர்பான தனியுரிமையைப் பெறுவதன் தேவை

03. இலங்கை பின்வரும் எந்த ஆணைக்குழுவின் யோசனை மீது குடியேற்ற நாடாக மாற்றப்பட்டது?
(1) தமியுரன் ஆனைக்குழு (2) கோல்புருக் ஆனைக்குழு
(3) டொனமூர் ஆனைக்குழு (4) சோல்பரி ஆனைக்குழு

04. கதம்ப நதி, கோண நதி, வன நதி என்னும் ஆறுகளின்தற்கால பெயர்கள் முறையே இடம் பெறும் விடை யாது?
(1) மல்வத்துஓயா, கலாஓயா, வளவை கங்கை
(2) மல்வத்துஓயா, தெதுரு ஓயா, கல்லோயா
(3) கலாஓயா, வளவை கங்கை, கனதரா ஓயா
(4) கனதரா ஓயா, கலாஓயா, மல்வத்துஓயா

## பாடம் : பௌதீகவியல்

01. வாகனச் சாரதிகள் தமது வாகனத்துக்குப் பின்னால் பாதையின் இரு மருங்கையும் பார்ப்பதற்கு பயன்படுத்தும் ஆடியில் தோன்றும் விம்பம் எவ்வாறுள்ளது.
(1) உண்மையானது சிறியது (2) உண்மையானது பெரியாது
(3) மாயமானது சிறியது (4) மாயமானது பெரியது

02. ஈர்ப்பு விசை மாற்றமடையும் போது பொருள்களில் எது மாற்றமடையும்.
(1) திணிவு (2) நிறை (3) கனவளவு (4) அடர்த்தி

03. ரேடியோ அலைகள் தொடர்பாக கூற்றுக்களுள் தவறான கூற்று யாது?
(1) ரேடியோ அலைகள் ஒரு விதமான மின் காந்த அலைகளாகும்
(2) ரேடியோ அலைகள் ஊடுகடத்துவதற்கு வாயு ஊடகம் தேவை
(3) ரேடியோ அலைகள் ஒளி அலைகளின் வேகத்திற்கு செல்லும்
(4) ரேடியோ அலையின் அலை நீளம் அதன் மீடிறனுக்கு அமையத் தீர்மானிக்கப்படும்.

04. மின்வலுவை அளக்கப் பயன்படுத்தப்படும் அலகு பின்வருவனவற்றுள் எது?
(1) அம்பியர் (2) வோல்ற்று (3) வாற்று (4) ஓம்

05. ஒவ்வொன்றும் v அழுத்த வித்தியாசத்தைக் கொண்ட மூன்று மின்கலங்களைச் சமாந்தரமாகத் தொடுத்து ஆக்கிய ஒரு மின் கலவடுக்கின் சமவலு அழுத்த வித்தியாசம் v ஆகும். v இன் பெறுமானத்தைத் தரும் சமன்பாடு பின்வருவனவற்றுள் எது?
(1) V = v (2) V = 3v (3) V = v/3 (4) V=1/v+ 1/v+1/v

06. அன்ரநோவ் விமானம் கடலில் அடியில் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட அலைகள்
(1) ஒளி அலைகள் (2) தொலைக்கட்சி அலைகள்
(3) வானொலி அலைகள் (4) ஒலி அலைகள்

07. இரும்பினாற் செய்யப்பட்ட கப்பல் ஒன்று கடலில் மிதக்கின்றது இக்கூற்று விளக்கப்பயன்படுத்தத்தக்க மிகத் திருத்தமான கூற்று யாது?
(1) கப்பலில் நிறைக்குச் சமனான மேன்முக உதைப்பு இருக்கின்றமை
(2) கப்பலில் நிறையிலும் பார்க்கக் கூடிய மேன்முக உதைப்பு இருக்கின்றமை
(3) கப்பலின் திணிவிலும் பார்க்கக் கூடிய நீர்த் திணிவு இடம் பெயர்க்கப்படுகின்றமை
(4) கப்பலின் திணிவிலும் பார்க்கக் குறைந்த நீர்த் திணிவு இடம் பெயர்க்கப்படுகின்றமை

08. மோட்டார் ஊர்தி ஒன்றின் தலைமை விளக்கிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர்கள் தேவையான அளவிலும் பார்க்க அகலமாகப் பரந்துள்ளன. இவ் வழுவைத் தவிர்ப்பதற்கு.
(1) மின்குமிழ் இருக்கும் இடத்தைப் பின்நோக்கித் தள்ள வேண்டும்
(2) மின்குமிழ் இருக்கும் இடத்தைப் முன்நோக்கித் தள்ள வேண்டும்
(3) மின்குமிழின் பிராகாசத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்
(4) தெறி பரப்புக்குப் புதிதாக முலாமிட வேண்டும்

**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**
**பஸ்தேர்வு**
ஆசிரியர் . பொன்னுத்துரை தவசிதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### கலைச் சொற்கள்

11. சிறப்பங்காடி – Super market
12. பெண்ணியம் - Feminism
13. உலகமயமாக்கல் - Globalaization
14. அருங்காட்சியகம் - Museum
15. எண்மானம் - Digital
16. அமை வனங்களம் - Oraganations
17. தூய்மைக் கேடு - Pollution
18. படியாக்கம் - cloning
19. மரபணு பொறியியல் - Genetic Engineering
20. நேர் முகம் - Interview
21. பரிந்துரை - Reccomendation
22. விசைப்பலகை – Key Board
23. ஏமக்குறைவு நோய் - Aids
24. வலைத்தளம் - Website
25. தகவல் ஊழி - Informationorld
26. புனைவுரிமை - Patent
27. ஊரகம் - Rural
28. செல் நெறி - Trend
29. ஊடகம் - Media
30. அடர் தகடு – CD-Compactdisk

**அருஞ்சொற்கள்**

இன்றைய மொழிப்பயன்பாட்டிலே இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த சொற்களுடன் மேலதிகமாக பல புதிய சொற்கள் எமது மொழியுட் புகுந்துள்ளன. இவை எமது நாகரிக வளர்ச்சியினால் ஏற்பட்டவை எனக் கூறுதல் பொருந்தும். இவ்வகையான சொற்களையே அருஞ் சொற்கள் எனலாம். அவ்வாறான சொற்களும் அவற்றின் பொருள்களும் வரும் வாரத்தில்....



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**underline the most suitable word in the bracket.**

While i was abroad I picked up a mystery (1) ........... ( infect / infection / infectious). My doctor sent me to see a (2) ............ (special / specially / specialist) because he did' t recognize my symptoms. After a thorough (3) ............. (examine / examination / examiner) he asked a nurse to give me an (4) ............. (inject / injector / injection). Although the arm was quite (5) ............. (pain / painful / painfully) for several days, my (6) ............... (recover / recoverable / recovery) was quick.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வகட்சி...

கேள்வி எழுந்துள்ளது.

ஜெனீவாவில் அமெரிக்கத் தீர்மான வரைபு முன்நிலைப்படுத்தப்பட்ட போது தமிழர்களின் தேவை சர்வதேச விசாரணையே என்தை வலியுறுத்தி சர்வதேச விசாரணையைக் கோரி பலலட்சம் தமிழ் மக்களின் கையெழுத்துக்களைப் பெற்று ஐ.நாவிற்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் அனுப்பிய போராட்டத்தை கூட்டாக முன்னெடுத்த கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சனாதிபதியால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் தமிழர்களுக்குக் காத்திரமான நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளத் தேவையான விடயங்களை முன்வைக்கக் கூடும் என்பதாலும் அச் சர்வ கட்சி மாநாட்டில் உண்மையாக என்ன பேசப்படுகின்றது என்பதை வெளிப்படுத்திவிடும் என்பதாலும் இக் கூட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைக்கப்படவில்லை எனத் தான் நம்பவதாக தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத சுதந்திர ஊடக ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈதெவேளை குறித்த விடயம் தொடர்பாகத் திருகோணமலை மாவட்ட தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளர்களுள் ஒருவரான இரா.ஸ்ரீஞானேஸ்வரனிடம் இவ்விடயம் தொடர்பாகக் கேட்ட போது, குறித்த விடயம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கட்சித் தலைமை உரிய நேரத்தில் மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் தொண்...

மூதூரில் கொல்லப்பட்ட பதினேழு அக்சன் பெய்ம் பிரான்சிய தொண்டரகத் தமிழ்ப்பணியாளர்களின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என "உடலகம" அறிக்கை தெரிவித்துள்ளது.

புலிகள் அக்கொலைகளைச் செய்து விட்டு இலங்கை இராணுவத்தில் அப்பழியைப் போட முயற்சிக்கின்றனர் என அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

ஏழு மனிதப் படுகோலைகள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி வந்த உதலகம சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 2006ம் ஆண்டு நொவம்பர் மாதம் வரையில் இடம்பெற்ற இவ் ஏழு படுகொலை சம்பவங்கள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தி அறிக்கைப்படுத்தி இருந்தது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குறித்த அறிக்கையின் படி செஞ்சோலைச் சிறார் மீது நடாத்தப்பட்ட வான் தாக்குதலுக்கும் பொறுப்பானவர்களாக விடுதலைப் புலிகளே பிரகடனப்படுத்தப் பட்டள்ளனர்.

சிங்கள வான்படையின் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக குறித்த மாணவிகளை விடுதலைப் புலிகள் மனிதக் கேடயங்களாக முன்னிறுத்தியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குறிவைக்கப்படும்...

யினரால் அழைக்கப்பட்டிருந்தார். விசாரணைகளின் முடிவிலேயே அவர் கைது செய்யப்பட்டு தற்பொது மூன்று நாட்கள் தடுப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்

2008ம் ஆண்டு ஆரையம்பதியிலுள்ள தமது வீட்டில் வைத்து ஆசிரியரான திரு. கிருஸ்ணபிள்ளை (தமிழ்நாட்டு மனோகரன்) மற்றும் அவரது மனைவி தயாளினி ஆகியோர் சுடுகலதாரிகள் இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இக்கொலைக்கு ரி-56 ரக இயந்திரச் சுடுகலன் பயன்பட்டதாக அன்றைய விசாரணைகளில் அறிக்கையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கொலை செய்யப்பட்ட இடத்தில் இருந்து வெற்று ரவைதாங்கிக் கூடுகள் அப்போது கைப்பற்றப் பட்டிருந்தன.

இவ்விரட்டைக் கொலை தொடர்பாக பிரசாந்தனின் சகோதரன் தேடப்பட்டு வருவதாகவும் அவர் தப்பிச் சென்றுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் போது பல உண்மைகளையும் கொலைத்திட்டங்கள் மற்றும் கொலை சம்பந்தமான தகவல்களையும் வெளியிட்டு வருவதாக ஆதாரமற்ற செய்திகள் வலைத்தளங்களிற் பரவிவரும் நிலையில் அடுத்தடுத்து அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் கைதாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட மக்ஸ்வெல் பரணகமவின் அறிக்கையில் கொலைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளும் சம்பந்தப்பட்டிருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் அரச படைகளுடன் இணைந்து இயங்கும் ஒட்டுக் குழுக்கள் தொடர்பாகப் பெயரிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலா...

சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண கிராமிய தொழில் துறை திணைக்களத்தின் பணிப்பாளர் கு. குணநாதனும், கௌரவ அதிதியாக திருகோணமலை நகர சபையின் முன்னாள் தலைவர் க. செல்வராஜாவும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

பேச்சும் செயலும் கவிதை நூலின் முதற்பிரதியை வீரகேசரி பத்திரிகையின் திருகோணமலை முகாமையாளர் து. சஞ்சீவனும், ஏக்கம் கவிதை நூலின் முதற்பிரதியை சிவஸ்ரீ. ஹரிஓம் நா. செல்வரத்தினக் குருக்களும் பெற்றுக் கொள்வார்கள்.

பேச்சும் செயலும் நூலின் மதிப்பீட்டு உரையினை சிரேஷ்ட சட்டதரணி ஆ. ஜெகசோதியும், ஏக்கம் கவிதை நூலின் மதிப்பீட்டு உரையினை ஓய்வு நிலை முதல்வர் கட்டைப்பறிச்சான் க. கனகசிங்கமும் நிகழ்த்துவார்கள்.

வரவேற்புரையினை இளம் ஊடகவியலாளர் பா. விபூஷிதனும் நன்றியுரையை எழுத்தாளர் திருமதி. உமாராஜன் பிரதீபாவும், நிகழ்வின் ஒருங்கிணைப்பை கவிஞர் தி. பவித்திரனும் வழங்கவுள்ளனர்.

## கிழக்கு மாகாண...

பெற்றுக்கொள்ளும் வகையில் கிழக்கு மாகாண சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. இதன்படி இனிவரும் காலங்களில் மாகாண சபை உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதி நான்கு மில்லியன் ரூபாய்களாக இருக்கும்.

**கலாசாரத் திணைக்களத்திற்கு மேலதிக நிதி-**

கிழக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களத்திற்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்கும் முயற்சியானது வெற்றியீட்டியுள்ளது. கிழக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களத்திற்கு கல்வி அமைச்சினால் ஒதுக்கப்படுகின் நிதி போதாதிருப்பதாக மட்டக்க்ளப்பில் மாகாணசபை உறுப்பின்ர் மாகாண சபை அமர்வுகளின் போது தனது உரையில் தெரிவித்ததுடன் ஒதுக்கீடுகளை கல்வி அமைச்சர் அதிகரிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

அதனையடுத்து பதிலளித்த கல்வி அமைச்சர் கலாசாரத் திணைக்களத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீட்டைச் செய்வதாக உறுதியளித்தார்.

**மாகாணசபையில் கட்சித் தாவல்**

மத்தியில் ஆட்சியில் அதிகாரத்துடன் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண அங்கத்தவர்கள் இருவர் கட்சி தாவினர்.

கிழக்கில் ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்திருக்கும் நிலையில் சுதந்திரக் கட்சியின் பால் ஈர்க்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான டீ.டீ.மெத்தானந்த சில்வா மற்றும் பி.எல்.அருண சிறிசேன ஆளும் தரப்புக்கு மாறியுள்ளனர்.

## கிழக்கில் உணவுப்...

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கே.கருனாகரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் முருகானந்தம், ஆசியா மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எம்.ஐ.எம்.வலீத் முன்னாள் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ்.நாகையா, உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பிரதம உணவு மருந்துப் பரிசோதகர் எஸ்.ரி.அபுதாலிப் ஆகியோர் இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் முதன்முறையாக கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பு ஆலோசனை சபையின் செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் பரவலாக்குவது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

இதன்போது 120 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த உணவு மாதிரி பரிசோதனை ஆய்வு கூடம் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண.....

அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக கவனஈர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெற்றது.

இந்தக் கவனஈர்ப்பு நடவடிக்கையில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் என்.எல்.யாசிர் ஐமன் உள்ளிட்ட பல பிரமுகர்களுடன் பொதுமக்களும் இதில் கலந்து கொண்டு எழுதப்பட்ட வாசகங்களை ஏந்தி நின்றனர்.

## அரசியல் கைதி.....

இயக்குனரான வண. பிரபாகரன் அடிகளின் தலைமையில் பட்டினிப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை உண்ணாநிலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இப்போராட்டத்திற்குக் கட்சிபேதமின்றி அனைத்தத் தமிழ்க் கட்சிகளினதும் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதே வேளை காணமல் ஆக்கப்பட்டோருக்கான திருகோணமலைச் சங்கத்தினர் மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் ஆகியோர் ஆதரவு தெரிவித்துப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இப்போராட்டத்தில் கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜெயராஜ் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் கீழ் சனாதிபதி விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இப் போராட்டத்தை காலை 9 மணிக்கு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் வந்தனைக்குரிய நோயல் இம்மானுவேல் ஆரம்பித்து வைக்க முன்னாள் ஆயர் வந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் நிறைவு செய்து வைத்தார்.

கலந்துகொண்ட அனைவருக்கும் இணை இயக்குனர் வண.பிரபாகரன் அடிகள் நன்றி கூறி வழங்கிய நீராகாரத்துடன் உண்ணாவிரதம் நிறைவு பெற்றது.

அங்கு பெறப்பட்ட கையெழுத்துக்களுடன் கூடிய கடிதம் சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## வலய இடம.....

பின்பற்றப்படவில்லை.

தொழிற்சங்கங்களில் பிரதிநிதிகள் என்பது தொழிற்சங்க ஆணையாளரினால் அனுமதி வழங்கப்பட்ட தொழிற் சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகளையே சாரும்.

இவ்வாறு தொழிற்சங்க ஆணையாளரினால் அனுமதி வழங்கப்படாததும் தேவையான அங்கத்தவர்களை கொண்டிராத சங்க பிரதிநிதிகள் பங்கு பற்றுவது கேலி கூத்தாகும்.

எனவே தாங்கள் மேற்படி விடயங்களை கருத்தில் கொண்டு வினைத்திறனான இடமாற்ற சபையை கொண்டு நடாத்த வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெளிவுபடுத்தும்படி கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

## ராஜித.....

இதே நடைமுறையை தற்போதைய தமிழ் கைதிகள் விவகாரத்திலும் அரசாங்கம் கையாள வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஸ்தாபிக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கம் தமிழ் கைதிகளின் விடுதலையினை உரிய வகையில் கையாளாதவிடத்து அரசாங்கத்திற்கே பாரிய சங்கடத்தை ஏற்படுத்தும் என ஆனந்தசங்கரி தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு

தமிழருக்கு என்று சிறப்பான, தனியான கொள்கைகள் ஆதிகாலம் தொட்டு இருக்கின்றன. அதனையும் உலகம் அறியும். நடத்தியும், நிர்வகித்தும் உங்களுக்கும் உலகுக்கும் தெளிவாகக் காட்டப்பட்டது நினைவிருக்கும். சிலவேளை அந்த கொள்கைகளை உலகம் பின்பற்றவும் கூடும்.

இந்த இசங்கள் பற்றி எதற்குச் சொல்லப் பட்டது என்றால் இவைதான் பனிப்போர் காலத்தில் உலகை பிரிந்து நிற்கச் செய்ததும், ஆதரவு தரச்செய்ததும் இந்த இசங்களால்தான்.

தற்பொழுது அமெரிக்காவின் தேர்தல் கால வியூகங்களுக்கிடையில், அனல் பறக்கும் கட்சிகளுக்குள்ளான பிரச்சாரங்கள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், அந்த நாட்டை பரபரப்புக்குள்ளாக்கி இருக்கும் முக்கிய விடயம் Pope Francis அவர்களின் அமெரிக்க சுற்றுப் பயணம்தான். செங்கம்பள வரவேற்வளிக்கப்பட்டு, அமெரிக்க காங்கிரசிலும் அவர் உரையாற்றி இருக்கிறார். முக்கிய விடயம் என்னவென்றால், அவர் அமெரிக்காவிற்கான பயண ஒழுங்கின் இடையில் கியூபா நாட்டிற்கும் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டது தான்.

ஏற்கனவே அமெரிக்க கியுபா உறவுகள் வலுப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அமெரிக்காவின் ஒழுங்கு-படுத்தலில், அவர்களின் செலவில் அவர் கியூபா சென்று வந்ததுதான் உலக நாடுகளை கொஞ்சம் அசைத்துப் பார்த்து இருக்கிறது. 60 வருடங்களாக பாம்பும் கீரியுமாக இருந்தவர்கள், இன்று கொஞ்சிக் குலாவுவது சிலருக்கு வேதனைதான். கியூபாவிற்கு பயணம் செய்த போப்களில் இவர் மூன்றாவதாவார். இதற்கு முன் 1998, 2012 களை விட இன்று இவரது பயணம் சற்று வித்தியாசமாகப் பார்க்கப்படுகிறது.

வெளியில் பல தரவுகள் இருந்தாலும் கியூபா அரசின் தகவலின் படி, 27% மட்டுமே கத்தோலிக்கர்கள் தான் அங்கே வாழ்கிறார்கள் என்றும், 44% மத மறுப்பாளர்கள் அல்லது மதம் அற்றவர்கள்தான் அதிகம் என்று சொல்கிறது. அப்படி இருக்க போப் அவர்களின் பயணம் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் உலக ஒழுங்கிற்குள் கியூபாவும் வந்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. "உடை களைந்தவர் சமூகத்தில், உடையுடன் இருப்பவன் கோமாளி" எத்தனையோ கம்யூனிச தேசங்கள் வீழந்த நிலையில் கியுபா மட்டும் Marxist–Leninist single-party state ஆக நிமிர்ந்து தனித்துவமாக வளர்ந்த ஒரு தேசம். ஆனால் இன்று கொஞ்சம் கொஞ்சமாக பிரித்து மேய்ந்து வருகிறது உலகம்.

சரி நாம் தொடரலாம். அந்த இசங்களால் உலகம் பிரிந்ததாக குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? ஆம். முதலாளித்துவ கொள்கை உள்ள நாடுகளை அமெரிக்காவும், கம்யுனிச கொள்கை உள்ள நாடுகளை சோவியத் ஒன்றியமும் தலைமை தாங்கின. பனிப்போர் காலத்தில் கம்யுனிச நாடுகளாக கிட்டத்தட்ட 40 நாடுகள் வரை இருந்தன. ஆனால் இன்று கம்யுனிச நாடாக தன்னை வைத்திருக்கும் தேசங்கள், அல்லது சொல்லிக் கொள்ளும் நாடுகள் வெறும் ஐந்துதான். (China, Cuba, Laos, North Korea, Vietnam) "கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்டது" பனிப்போரின் விளைவுதான் இது.

ஆனால் முதாளித்துவ நாடாக அமெரிக்காவிற்கு பின்னுக்கு நின்ற நாடுகள் இன்னும் பல நாடுகளுடன் சேர்ந்து முதலாளித்துவமாக தமது அரசியல் பொருளாதார நிலைகளை தக்க வைத்துக் கொண்டு இருக்கிறது.

மேலும் இவற்றுள் அடங்காத நாடுகள், அல்லது மூக்கை நுழைக்க விரும்பாத நாடுகள் தம்மை அணிசேரா நாடுகளாகவும், பார்வையாளர்களாகவும் தம்மை மாற்றிக் கொண்டு அமைதியாக வாழ்ந்தன. இப்படியான நாடுகளாக Egypt, India, Indonesia, Yugoslavia போன்றவற்றை சொல்லலாம். இன்றும் சிலநாடுகள் அப்படியே இருக்கின்றன.

என்னதான் நடு நிலையாக இருப்பதாக இந்தியா தன்னைக் காட்டிக் கொண்டாலும் பனிப்போர் காலத்தில் சோவியத் ஒன்றிய சாயலையே தன்னுள் வைத்துக் கொண்டது. 1991 க்குப் பிறகுதான் அது தனது வெளிநாட்டுக் கொள்கைகளை மாற்றிக் கொண்டது உண்மை. இப்பொழுது இந்திய அமெரிக்காவின் நெருங்கிய பிராந்திய நண்பனாக இருக்கிறது. இந்த இந்தியா தெற்காசிய பிராந்தியத்தின் வல்லாதிக்கத்தைக் கொண்டு இருப்பதால்தான், கடந்த கால தமிழர் இன விடுதலைப் போராட்ட காலத்தில், எங்குமே எந்த பக்கமும் அமேரிக்கா தன்னை வெளிப்படையாக நுழைத்துக் கொள்ள விரும்ப வில்லை என்பது சொல்லித் தெரியதேவையில்லை.




# நிகழ்வுகள் "அகம்"

## கல்விக்கான ஊக்குவிப்புத் தொகை வழுங்கிவைப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டலுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட அகம் நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்-கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் கீழ் அகம் நிறுவனத்தினால் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வரும் வவுணதீவு, வெல்லாவெளி, பட்டிப்பளை, கிரான் ஆகிய பகுதி பல்கலைக்கழக மாணவர்களில் தெரிவு செய்யப்-பட மாணவர்களுக்கு கல்வி-க்கான ஊக்குவிப்பு தொகை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.பி எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக உதவி திட்டமிடல் இணைப்பாளர் அ.சுதர்சன், மட்டக்களப்பு மாவட்ட அகம் நிறுவன இணைப்பாளர் தங்கராசா திலீப்குமார், நிறுவன திட்ட இணைப்பாளர் திருமதி. எஸ்.நிரஞ்சனி மற்றும் [illegible] உத்தியோகத்தர்கள் கொண்டனர்.





## திருமலையில் கும்ப விழா

### 22.10.2015 அன்று

திருகோணமலை மாவட்டத்திற்குரிய தனித்துவமான சிறப்பு வாய்ந்த கும்ப விழா 22.10.2015 வியாழக்கிழமை மாலை ஆரம்பமான போது பல கோவில்களிலிலுமிருந்தும் கும்பம் தூக்கி ஆடப்பட்டது. கரகம், கன்னிவாழை வெட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இக் கும்ப விழா காட்சிகள் திருகோணமலை, சேனையூர், தம்பலகாமம், கட்டைப்பறிச்சான் பகுதிகள் என அனைத்து இடங்களிலும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டன.

அத்துடன் வேட்டைத் திருவிழாக்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகளை பல்லின மக்களும் பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து கேதார கௌரி காப்பு விரதம் ஆரம்பமாகியுள்ளது.



## நவராத்திரி விழா



திருகோணமலை காந்திநகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அறநெறி பாடசாலையால் நவராத்திரி விரதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட இந்து சமய வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அத்துடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியோர்

### ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 68 மாணவர்கள் 151 என்ற தகைமைப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். தகைமை பெற்ற மாணவர்களைப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## 1 இனிங்ஸ் 87 ஓட்டங்களால் வெற்றி

### சம்பியன் ஆனது வெஸ்லி அணி

பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கான போட்டிகளில், வெஸ்லி கல்லூரி அணி வெற்றிபெற்றது. கரதெனிய மத்திய கல்லூரிக்கு எதிரான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வெஸ்லி கல்லூரி அணி, 249 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தனது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் மொட் அத்துலத்முதலி 69 ஓட்டங்களையும் ஸெனித் விக்கிரமநாயக்க 61 ஓட்டங்களையும் பெற்றனர். தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கரதெனிய மத்திய கல்லூரி அணி, 49 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பந்துவீச்சில், வெஸ்லியின் அன்ட்ரு பரயஸ், மிகச்சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்தார். 14 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக் கொடுத்த அவர், 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். கரதெனிய மத்திய கல்லூரி அணி, 114 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்து, ஓர் இனிங்ஸ் மற்றும் 87 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

## கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு

### மலையக வீரர்களிற்கான – வி.துறையின் ஏற்பாட்டில்

மலையகத்தில் விளையாட்டுத்துறையில் சாதித்த வீரர்களை கௌரவிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை பவர் ஹொப் யூத் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. முதல் கட்டமாக ஹாலி எல பிரதேச பெருந்தோட்டங்களில் சாதனை படைத்த முன்னாள் வீர வீராங்கனைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.



கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், சிலம்பாட்டம், மரதன் மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளில் சாதனை படைத்த முன்னாள் வீரர்களுக்கே இக்கௌரவிப்பு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி ஹாலி எல இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இந்தியா வர பாக்கிஸ்தான் மறுக்கலாம்

மும்பையில் நடைபெற இருந்த இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர்களுக்கிடையிலான பேச்சு வார்த்தை சிவசேனா போராட்டத்தால் ரத்து செய்யப்பட்டது.

மேலும், சிவசேனா மிரட்டலால் ஐ.சி.சி. தங்களது நடுவரான அலீம் தாரை திரும்பப்பெற்றது. இந்த செயல்களால் பி.சி.சி.ஐ. தர்மசங்கடத்திற்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவிருக்கும் இருபதுக்கு 20 உலகக்கிண்ணப் போட்டியில் விளையாட வரவிருக்கும் பாகிஸ்தான் வீரர்கள் மறுப்பு தெரிவிக்க வாய்ப்பு உள்ளதாக ஐ.சி.சி. தலைவர்களில் ஒருவரும் பாகிஸ்தான் முன்னாள் வீரருமான ஸாஹிர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

## பொன்டிங் மறுப்பு



பகலிரவு டெஸ்ட் போட்டிகளுக்கு எதிர்ப்பானவராகவே தான் காணப்படுவதாக, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார். உலகின் முதலாவது பகலிரவு டெஸ்ட் போட்டி, அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் எதிர்வரும் நவம்பரில் இடம்பெறவுள்ள நிலையிலேயே, அது தொடர்பான கருத்துக்களை றிக்கி பொன்டிங் வெளிப்படுத்தியுள்ளார். பரிட்சார்த்தமாக இடம்பெறவுள்ள இந்த வகைப் போட்டிகளும் பயன்படுத்தப்படவுள்ள மென்சிவப்புப் பந்துகளும், அதிகமான கவனத்தை ஈர்ப்பதோடு, வீரர்களது அதிகமான கூர்ந்தாய்வுக்கும் உட்பட வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தார்.

## பழங்குடியினரின் விளையாட்டுப்போட்டி

பழங்குடியின மக்களின் விளையாட்டுக்களை உள்ளடக்கிய சர்வதேச பழங்குடியின விளையாட்டுப் போட்டிகள் நேற்று வெள்ளிக்கிழமை பிரேஸிலில் ஆரம்பமாகியன.

பிரேஸிலின் வடகிழக்கு நகரான பல்மாஸில் ஆரம்பமான இப்போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. போட்டியின் ஆரம்ப விழாவில் அந்நாட்டு ஜனாதிபதி டில்மா ரூசொப் கலந்து கொண்டதோடு, போட்டிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தும் வைத்ததாக கூறப்படுகின்றது. இதேவேளை இந்தப் போட்டிகளை முன்னிட்டு மத்திய பல்மாஸில் கடந்த வியாழக்கிழமை பாரம்பரிய விளக்கு ஏற்றும் நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

பிரேஸில் பழங்குடியின விளையாட்டுப் போட்டிகளில் சுமார் 30 நாடுகளைச் சேர்ந்த அணியினர் கலந்துகொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு

சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் ஷேவாக், ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் சதம் அடித்தார். கடந்த இரு தினங்களுக்கு முன்பு ஷேவாக் ஐபிஎல் மற்றும் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆனால் முதல் தரப் போட்டியான ரஞ்சியில் இருந்து விலகவில்லை.

இந்நிலையில் மைசூரில் தொடங்கியுள்ள ரஞ்சிக் கிண்ணப் போட்டியின் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கர்நாடகா- அரியானா அணிகள் மோதின.

இதில் அரியான அணியில் தலைவராக களமிறங்கிய அதிரடி வீரரான ஷேவாக் 136 ஓட்டங்கள் (170 பந்து, 16 பவுண்டரி, 3 சிக்சர்) விளாசி அசத்தினார்.

## உதைப்பந்தாட்ட போட்டி விசாரணைகள் ஆரம்பம்

நவம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள றியல் மட்ரிட், பார்சிலோனா அணிகளுக்கிடையிலான போட்டி, நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வெளியான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த போட்டிக்காக நியமிக்கப்பட்டுள்ள உதவி அதிகாரியொருவர், அப்போட்டியில் றியல் மட்ரிட் கழகத்துக்குச் சார்பாகச் செயற்படுமாறு அழுத்தத்துக்குள்ளாக்கப்படுகிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்ததையடுத்தே, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாக, ஸ்பானிய காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

## கங்குலியை முறியடித்த விராட்



தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான இன்றைய ஒருநாள் போட்டியில், வீராட் கோஹ்லி சதமடித்து கங்குலியின் சாதனையை முறியடித்துள்ளார். தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 4வது ஒருநாள் போட்டியில், இந்திய அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 299 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இந்த போட்டியில் வீராட் கோஹ்லி 138 ஓட்டங்கள் எடுத்தார், இது அவரது 23வது சதமாகும்.

உலகளவில் சச்சின் 49 ஒருநாள் சதங்களுடன் முதலிடத்தில் உள்ளார், இவருக்கு அடுத்தபடியாக 22 சதங்களுடன் இருந்த கங்குலியின் சாதனையை கோஹ்லி முறியடித்துள்ளார். சச்சினுக்கு அடுத்தபடியாக ரிக்கி பொண்டிங் (30 சதங்கள்), ஜெயசூர்யா (28 சதங்கள்), குமார் சங்கக்காரா (25 சதங்கள்) உள்ளனர்.

## 7600அடி உயரத்தில் கிரிக்கட் விளையாடிய பிளெமிங்

பாலிவூட் நடிகர் சித்தார்த் மல்கோத்ரா சமீபத்தில் இந்தியா, நியூசிலாந்தின் சுற்றுலா தூதராக நியமிக்கப்பட்ட இவர் நியூஸிலாந்து சென்ற இவர், முன்னாள் கப்டன் பிளமிங், வீரர்கள் ஸ்கொட் ஸ்டைரிஸ், சைமன் டபலை அழைத்துக் கொண்டு, கடல் மட்டத்தில் இருந்து 7,600 அடி உயரத்தில் உள்ள எப்போதும் பனிப்பொழிவு காணப்படும் இசோபெல் கிளேசியர் என்ற மலைப்பகுதிக்கு ஹெலி கொப்டரில் சென்று ஆடுகளத்தை தயார் செய்ததுடன் கிரிக்கட் விளையாடியுள்ளனர்.



## கறுப்புக் குதிரை கௌரவிப்பு

ஆசியாவின் கறுப்புக்குதிரை என வர்ணிக்கப்பட்ட சுசந்திகா ஜயசிங்க ஒலிம்பிக் பதக்கம் வென்று கடந்த 28 ஆம் திகதியுடன் 15 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு அவரை கௌரவிக்கும் வைபவமொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த 7ந் திகதி நடைபெற்றது.


## சேர் கா.ஃபில்ட் இலங்கை விஜயம்

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் அணியின் புகழ்பெற்ற சேர் கா.ஃபில்ட் சோபர்ஸ் கடந்த செவ்வாயக்கிழமை இலங்கை வந்துள்ளார். சிறிலங்கா கிரிக்கட்டின் அழைப்பின் பேரில் இங்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 22ம் திகதி முதல் கொழும்பு பி சரவணமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ள இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2 வது டெஸ்ட் கிரிக்கட் போட்டியை அவர் பார்வையிடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்கும் வேண்டுகோள் சனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

## தமிழர் நலன்காப்பு அமைப்பு தெரிவிப்பு


Welfare Organization of Tamils (WOT)
No.05, Dockyard Road, Trincomalee.

Letter to Hon. President of Sri Lanka

Request for release of Tamil Political Prisone s



தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் நடாத்தபட்ட ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தில், சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களுடன் கூடிய கடிதத்தை சனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாக தமிழர் நலன்காப்பு அமைப்பின் இணை இயக்குனர்களில் ஒருவரான இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்வமைப்பின் இணை 17

# வலய இடமாற்றச் சபையில் முறைகேடு !

திருகோணமலை மாவட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பொன். சந்திரேஸ்வரன் திருகோணமலை வலய ஆசிரியர் இடமாற்ற சபை 2015-16ல் உரிய நிர்வாக முறை பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டடை முன்வைத்துள்ளார்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ள அவர், "தங்களால் 29.01.2015 அனுப்பப்பட்ட EP/20/01/33 இலக்க சுற்றுநிறுபத்திற்கு முரணாக திருகோணமலை வலயத்தில் இடமாற்ற சபை அமைவதை காணக்கூடியதாக உள்ளது. உறுப்பினர்கள் தொடர்பில் தாபனக்கோவை IIIன் அத்தியாயம் 3-5(அ) மற்றும் (ஆ) விதிகள் 17

# ஊடகவியலாளர் அச்சுதனின் கவிதை நூல் வெளியீடு





ஊடகவியலாளர் சேனையூர் அ. அச்சுதன் எழுதிய பேச்சும் செயலும் கவிதை நூல் வெளியீட்டு விழா-வும், கலாபுஷணம் சிவஸ்ரீ அ. அரசரெத்-தினம் (சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய பிரதம குரு) அவர்களின் ஏக்கம் கவிதை நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் புதன்கிழமை (28) மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசரியர் எஸ்.ஆர். தனபால-சிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கமும், 17

## கலாபூசனம் அரசரெத்தினத்தின் கவிநூல் 'ஏக்கம்' வெளியீடு






# வடமாகாண முஸ்லிம்களை மீளக்குடியேற்றுக

## அட்டாளைச்சேனையில் ஆர்ப்பாட்டம்



வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி இன்று (23) வெள்ளிக்கிழமை 17


தமிழர்கள் தமது தனித்துவ. இன அடையாளங்களைப் பேணிப் பாதுகாப்பது தலையாய கடமை! தனித்துவ அடையாளங்களே தேசிய இன அடையாளமாக கணிக்கப்படும். அடையாளங்கள் ஊடாக தேசிய இனம் என்பதை உலகிற்குச் சொல்வோம்!

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"


# "ராஜிதவின் கூற்று பிரச்சனையை உருவாக்கும்" ஆனந்தசங்கரி

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் அரசியல் கைதிகள் தொடர்பான கருத்து கைதிகள் மத்தியில் மீண்டும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என தாம் கருதுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்

இலங்கையில் அரசியல் கைதிகள் என யாரும் இல்லையென ஊடக சந்திப்பொன்றில் ராஜித சேனாரத்ன தெரிவித்த கருத்து தொடர்பில் ஆனந்த சங்கரி வெளியிட்டுள்ள அறிக்கையில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கைதிகள் குற்றம் செய்தார்களா, இல்லையா என்பது தமது பிரச்சினை அல்லவெனவும் அவர்கள் சிறைகளில் அதிக தண்டனைக் காலத்தை அனுபவித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

அத்துடன், முன்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பலருக்கும் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுள் சிலர் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிப்பதாகவும் வீ. ஆனந்தசங்கரியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.... 17


முதந்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738


# சரத்திற்குள் அமுக்க வெடி சந்தேகநபர் விடுதலை

பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய கைக்குண்டு ஒன்றையும் இரு அமுக்க வெடிகளையும் தமது உடமையில் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி மீன் வியாபாரி ஒருவருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரியான மீன் வியாபாரி குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திர மணிவிஸ்வலிங்கம் மேற்படி எதிரியை விடுவித்து தீர்ப்பு வழங்கினர்.

# தொடருந்து மோதியதில் இளவல் பலி

சீனக்குடாவில் தொடருந்தில் மோதுண்டு இளைஞனொருவன் உயிரிழந்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பாலையூற்று கிராமத்தைச் சேர்ந்த றியாஸ் மொஹமட் ரினாஸ் (வயது 18) என்ற இளைஞனே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் தண்டவாளத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போதே பின்னால் வந்த தொடருந்துடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரஏந்து பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 24.10.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.